1206

தமிழரசு

ஆனித் திங்கள்

OFFIC... 17 JUN 19..

ஷர்லி டெம்பிள்

1937-June

இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்

OFFICE OF THE REGISTRAR ...
17 JUN 1937
MADRAS

புத்திர உற்பத்தியை யளிக்கும்.

"என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுகாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் [illegible] இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல [illegible]தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணா அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள,

தேவராப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் ஒன்று மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய
புட்டி 1-க்கு விலை ரூபா 5.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

17 JUN 193

மலர்	ஈஸ்வரஹு ஆனிமீ	இதழ்
8	1937ஹு ஜூன்மீ 15வ	6

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள்	...	320
ஆ! அந்த காதற் கடிதம்	...	328
வெகுமதி	...	331
கமலகாந்தா	...	333
மசால்வடைக் கிழவி	...	341
'விஜயராம் அல்லது போலிச் சாமியார்'	...	345
ஐ. வி. எஸ். ரெங்கன்	...	349
கமலாட்சி அல்லது காரிகையின் களங்கமற்ற காதல்	...	354
'பம்பாய் மாப்பிள்ளை'	...	361
சிவகாமி அல்லது தன் கற்பைக் காத்த காரிகை	...	366
'தம்பி மாசிலாமணி'	...	374

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

அரசியல் பீடை

புதிய சீர்திருத்தம் அமுலுக்கு வந்தவேளை என்ன வேளையோ, அன்று அதைப் பிடித்த பீடை இன்னும் அதைவிட்டு நீங்கவில்லை. அது நீங்குவதற்கு இன்னும் சிலகாலம் பிடிக்குமென்றே தோற்று கிறது. அந்தப் பீடை நீங்க ஏதாவது ஒருவழி ஏற்படும் என்று எதிர் பார்த்து பொதுமக்களும் சலித்துப் போய்விட்டார்கள். ஏன், பொது மக்கள் மட்டுமல்ல, அரசியல் வாதிகளும் சர்க்காரும் காங்கிரஸ் கட்சி யினரும் மற்றும் நாட்டிலுள்ள எல்லோருமே சலித்துப் போய் விட்டார்கள். அதனால் இப்பொழுது பொதுமக்கட்கு இந்த விவகாரத்தில் சிறிது சிரத்தை குன்றிவிட்டதென்றே கூறலாம். இன்னும் சிலநாட்கட்கு விவகாரம் இந்நிலையிலேயே இருப்பின், இதில் பொதுமக்கட்குள்ள சிரத்தையும் ஆர்வமும் அறவே குன்றிவிடும். எனவே இதை ஒருவழியாய் தீர்க்க வேண்டியகாலம் கிட்டிவிட்டது.

சகுனி மாமாக்கள்

நிற்க, இது சம்பந்தமாய் யோசனை கூற சில சகுனிமா மாக்கள் புறப்பட்டுவிட்டனர். ஆனால் அவர்களுடைய துரதிர்ஷ்டம் அவர்கள் யோசனையை சர்க்கார் காதில் போட்டுக்கொள்ளவில்லை. வங்காள ஐரோப்பியர்களும் சென்னை ஐரோப்பியர்களும் காங்கிரசை ஏதாவது ஒருவிதமாய் சாந்தப்படுத்தி காங்கிரஸ் கட்சியை பதவி ஏற்கச்செய்ய விரும்பில்லை. மற்றும் 'இடைக்கால மந்திரி சபைகளும்' அவர்கட்கு வேண்டாமாம் அவர்கள் கவர்னர்கள் தாங்களே அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். அவர்கட்கு செக்ரட்டரியேட் ஆட்சியே வேண்டுமாம். அதாவது அதிகாரவர்க்கத்தினர் (ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள்) ஆட்சியே வேண்டுமாம். தங்களின் இந்த யோசனை மிகப் பொருத்தமானதென்றும் காலப்போக்குக்கு ஒத்ததென்றும் உண்மையாகவே அவர்கள் கருதுகின்றனர்களா? தங்களின் இந்த யோசனைக்கு யாராவது கௌரவம் கொடுப்பார்கள் என்று கருதுகின்றனர்களா? இந்த யோசனை இந்த நாட்டில் ஐரோப்பியர்களின் கௌரவத்தை அதிகப்படுத்துமென்று கருதுகின்றனர்களா! அவ்விதம் அவர்கள் கருதுகின்றனரென்று நாம் நினைக்கவில்லை. பின் எது அவர்களை இவ்வித யோசனை கூறும்படி தூண்டியது?

சுயநலத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்றே கூறவேண்டும். அதிகாரவர்க்கத்தினர்களின் செய்கைகளைவிட இந்த விதமான யோசனைகள்தான் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் அதிக மனக் கசப்பையும் வெறுப்பையும் உண்டாக்குகிறது என்று அவர்கள் உணரும் நாள் எந்நாளோ! நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அரசியல் அலங்கோலத்தை தீர்க்க, சமரசத்துக்கு ஏதுவான, நல்ல யோசனை அவர்களால் கூறமுடியாவிடில், அவர்கள் தங்களின் ஊத்தைவாயை திறக்காது சும்மா இருப்பதே மேல்.

நாடகத்தை நிறுத்த வேண்டும்

இப்பொழுது காங்கிரஸ் கட்சியினர் தாங்கள் வேண்டுமென்றே நிர்வாகம் ஸ்தம்பித்துப் போகும்படியான காரியங்கள் செய்யமாட்டோம் என்கின்றனர். கவர்னர்களும் தாங்கள் அனாவசியமாய் மந்திரிகளின் செய்கையில் குறுக்கிடமாட்டோம் என்கிறார்கள். நிலைமை இவ்விதமாக இருந்தும் அரசியலைப் பிடித்தபீடை தீர வழியேற்படாது இருப்பதுதான் வருந்தத்தக்கதாய் இருக்கிறது. இருகட்சியாரும் அவரவர்கள் அபிப்பிராயத்தை சொல்லிக்கொண்டே போகின்றனர்களேயன்றி, யாராவது ஒருவரை ஒருவர் அணுகி இக்காரியத்தை இவ்விதமாக முடித்துக் கொள்ளலாம் என்றுகூற முன் வரவில்லை. காங்கிரஸ் கட்சியினர் 'வாக்குறுதியில்லையேல்' பதவி ஏற்க முடியாதென்று கூறியபின் சர்க்கார் அது சம்பந்தமாய் அறிக்கைகள் வெளியிட்டதுடன் வாளா இருந்துவிட்டனர். அதைப்பற்றி மாகாணக் கவர்னர்களோ அல்லது வைஸ்ராயோ ஒன்றுமே பேசவில்லை. சிலநாட்கட்கு முன்புதான் இரண்டு மாகாணக் கவர்னர்கள் அதைப்பற்றி தாங்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள். அவர்கள் கூறியதைப் பார்க்கும்போது எந்த வகையிலேனும் 'வாக்குறுதி' தரவேண்டும் என்று கேட்பது வரப்போவதில்லை என்று தெரிகிறது. ஆனால் அவர்கள் தாங்கள் மந்திரிகளுடன் ஒத்துழைத்து அவர்கட்கு வேண்டும் உதவிபுரிவதாகக் கூறுகின்றனர். எனவே காங்கிரஸ் கட்சியினர் நாம் முதலில் வாக்குறுதி கேட்டுவிட்டோமோ என்ற கௌரவம் பார்க்காது உத்தியோகம் ஏற்கும் வழியை பார்க்கவேண்டும். அவர்கள் ஒவ்வொரு சமயமும் இந்தவிதமாய் எங்கட்கு வாக்குறுதி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டே போகும் நாடகத்தை நிறுத்தவேண்டும்.

என் தள்ள வேண்டும்?

இப்பொழுது காங்கிரஸ் கட்சியினர் மந்திரிகட்கும் கவர்னர்கட்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் கவர்னர்கள் மந்திரிகளை பதவியிலிருந்து தள்ள (டிஸ்மிஸ் செய்ய) வேண்டும் என்கின்றனர். பம்பாய் கவர்னர் தான் அரசியல் நிலைமையைப்பற்றி பேசியபோது அரசாங்கப்

பொறுப்பு சட்டப்படி கவர்னர்கட்கே இருந்தாலும் காரியங்கள் செய்ய வேண்டியதெல்லாம் மந்திரிமார்களே என்று கூறியுள்ளார். இதை எடுத்துக்கொண்டு காரியங்கள் செய்யவேண்டிய பொறுப்பு மந்திரிகட்கே இருக்கிறமையால், அவர்கள் செய்கையில் கவர்னர்கள் குறுக்கிட்டுக் காரியம் செய்யும்போது, அதற்கு மந்திரிகள் பொறுப்பாகார்கள் என்றும், எனவே மந்திரிகளை கவர்னர்கள் வேலையிலிருந்து தள்ளவேண்டும் என்றும் கூறப்படுகிறது. இது பொருத்தமான வாதமில்லை. மந்திரிகளின் செய்கையில் கவர்னர்கள் குறுக்கிட்டு அவர்கள் கருத்துக்கு மாறாக ஒரு காரியத்தை செய்வார்களானால் அதற்கு மந்திரிகள் பொறுப்பாகார்கள் என்பது உண்மை. ஆனால் அதற்காக கவர்னர்கள் ஏன் மந்திரிகளை வேலையிலிருந்து தள்ள வேண்டும்! மந்திரிகள் ராஜிநாமாச் செய்வதே முறையாகும். அவர்களேதான் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிட்டு, கவர்னர்களின் அச்செய்கைக்கு தாங்கள் பொறுப்பல்ல என்று ஓட்டர்களிடம் முறையிட்டுக் கொள்ளவேண்டும்.

சபைகளை கூட்டத் தீர்மானம்

காங்கிரஸ் கட்சியினர் அடிக்கடி ஒவ்வொருவிதமாக மாறிமாறி இவ்வித வாக்குறுதி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டே போவதால் உண்மையில் பதவி ஏற்று ஓட்டர்கட்கு அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முயன்று பார்க்க அவர்கட்கு விருப்பமில்லை என்று பொதுமக்கள் நினைக்க ஆரம்பிக்கின்றனர். சர்க்காரோ காங்கிரசுக்கு பதவி ஏற்க உண்மையான விருப்பமில்லை என்று முடிவு கட்டிவிட்டனர் என்று தெரிகிறது. அதனாலே அவர்கள் சட்டசபைகளை கூட்டத் தீர்மானித்துவிட்டார்கள் என்று தெரிகிறது. சட்டசபைகளை கூட்டினால் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிகள்மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானம் கட்டாயம் நிறைவேற்றுவர் என்றும், அப்பொழுது காங்கிரஸ் கட்சித் தலைவர்களை மீண்டும் கூப்பிட்டு மந்திரி சபைகளையமைக்கும்படி கேட்பதென்றும், அப்பொழுதும் அவர்கள் வழிக்கு வராவிடில் தங்களிஷ்டப்படி காரியம் செய்வதென்றும் தீர்மானித்துவிட்டார்கள் என்றும் தெரிகிறது.

நல்ல தருணம்

ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் சட்டசபைகள் கூட்டப்படும். அது காங்கிரஸ்காரர்கட்கு தகுந்த தருணம். அத்தருணம் தப்பினால் வேறு தருணம் கிடைக்கப் போவதில்லை. எனவே அச்சமயத்தை கைசோரவிடாது காங்கிரஸ் கட்சியினர் பதவி ஏற்க முடிவு செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சியினரில் பலரும் பதவி ஏற்பதை விரும்புகின்றனர் எனத் தெரிகிறது. வாக்குறுதி கேட்பதும் பிசகென்றே

அவர்கள் கருதுகின்றனர். ஆனால் அதை வெளிப்படையாய் சொல்லி தங்கள் தலைவர்களுடன் வாதித்து காரியம் சாதிக்கப் பயப்படுகின்றனர். அவ்விதம் செய்ய அவர்கட்கு மனோதைரியமில்லை. அவர்கள் தங்கள் தலைவர்களிடம் சொல்லி இம்மாதம் கூடவிருக்கும் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் வாக்குறுதி எதுவும் எதிர்பாராமல் தங்கள் சொந்தப் பலத்திலே நம்பிக்கைகொண்டு பதவி ஏற்கத் தீர்மானிக்கும்படிச் செய்யவேண்டும். திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் சில நாட்கட்கு முன் மகாத்மா காந்தியை சென்று பார்த்து வந்துள்ளார். சுற்றுப் பிரயாணத்திலிருக்கும் காங்கிரஸ் தலைவர் திரு. ஜவஹர்லாலுக்கும் உடனே புறப்பட்டு வரும்படி அவசர அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் இதுசம்பந்தமாகத்தான் நடக்கிறதென்று நாம் நம்புகிறோம். காங்கிரஸ் காரியக்கமிட்டி நிபந்தனை எதுவுமின்றி பதவி ஏற்க அநுமதிக்குமென்றே நம்புகிறோம். அதற்கு மாறாக ஏதாவது செய்து, காங்கிரஸ்கட்சியை பதவி ஏற்கமுடியாது செய்யின், அது வீண்தொந்தரவில் வந்துமுடியும்.

ஐ. சி. எஸ். ஆட்சியா?

கவர்னர்கள் மீண்டும் காங்கிரஸ் தலைவர்களை அழைத்து அவர்களை மந்திரி சபைகளை அமைக்கும்படி கேட்கும்போது, அவர்கள் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி மறுத்தால் கவர்னர்கள் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பை தாங்களே ஏற்றுக்கொள்வார்கள். பின்னர் மூன்று வருடகாலம் யாரும் எதுவும் செய்யமுடியாது. எல்லோரும் வாயைப் பொத்திக்கொண்டு சும்மா இருக்க வேண்டியதுதான். மற்றும் காங்கிரஸ், ஐரோப்பியர்கள் விரும்புகிற ஐ. சி. எஸ். வர்க்கத்தார் ஆட்சிக்கு இடங்கொடுத்தவர்களாகி விடுவர். இதற்கு பொறுப்பை நாட்டில் வேறெந்த கட்சியார்மீதும் அவர்கள் சமத்தமுடியாது. ஏனென்றால் காங்கிரஸ் பெரும்பான்மை கட்சியாயிருக்கும் மாகாணங்களில் வேறு பலமுள்ள கட்சிகளில்லை. எனவே இந்தப் பொறுப்பு அவர்களையே சாரும். இவைகளை எல்லாம் யோசித்து காங்கிரஸ் உத்தியோகம் ஏற்கத் தீர்மானிக்கும் என்று நம்புகிறோம்.

திரு. பால்டுவின் ராஜிநாமா

சென்ற மாதத்தில் இங்கிலாந்தில் இரண்டு செய்கைகள் நடந்துள்ளன. ஒன்று ஆறாம் ஜார்ஜ் மன்னர், எலிஜபெத் மகாராணி முதலியோரின் முடிசூட்டு விழா. இம்மகுடம் சூட்டும் விழா ஆடம்பரமாய் கண்டோர் களிக்கும்வண்ணம் நடந்தேறியுள்ளது. இதற்கு வெளி நாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் சென்றுள்ளார்கள்.

இரண்டாவது பிரதம மந்திரி திரு. பால்டுவினின் ராஜிநாமா. அவர் ராஜிநாமா கன்சர்வேட்டிவ் கட்சியினருக்கு ஒரு பெரும் நஷ்டமாகும். இருந்தாலும் அவரை ராஜிநாமாச் செய்யவேண்டாமென்றும் தடுப்பதற்கில்லை. ஏனென்றால் அவருக்கு வயதாகி விட்டது. எழுபதுக்கு மேலாகிவிட்டது. எனவே அவர் ஓய்வாககாலத்தை கழிக்க விரும்புகிறார். அவர் கடந்த ஆண்டின் மத்தியிலேயே ராஜிநாமாச்செய்ய இருந்தார். ஆனால் அவருடைய மனைவியாரும் மற்றையோர்களும் அவரை கிரீடம் தரிக்கும் விழா நடைபெற்று முடியும்வரை ராஜிநாமாச் செய்யவேண்டாமென்று தடுத்துவைத்தனர். இப்பொழுது அவ்விழாவும் முற்றுப் பெற்றுவிட்டமையால் அவர் தனது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். அவரது ராஜிநாமாச் செய்கையில் ஏனைய பிரிட்டிஷ் பிரதம மந்திரிகட்கு கிடைக்காத ஒரு பாக்கியம் அவருக்கு கிடைத்துள்ளது. மற்றைய பிரதம மந்திரிகளெல்லாம் ராஜிநாமாச் செய்தபோது குடியேற்ற நாட்டு பிரதம மந்திரிமார்கள் அவர்கள் அருகில் இருந்ததில்லை. திரு. பால்டுவினுக்கோ அந்தப் பாக்கியம் கிடைத்துள்ளது. அவர்கள் அவரருகில் இருந்து அவரது தேசசேவையைப் பாராட்டி அவரை வாழ்த்தியுள்ளனர். திரு லாயிட் ஜார்ஜ் மகாயுத்தத்தை வெற்றிபெற நடத்தினமையால் பிரிட்டிஷ் பிரதம மந்திரிகளில் மகா திறமைசாலியென்றும் கெட்டிக்காரரென்றும் பெயர் வாங்கினார். திரு. பால்டுவினும் அவரைப் போன்றவரே. திரு. லாயிட் ஜார்ஜ் மகாயுத்தத்தை திறப்பட நடத்தி வெற்றி பெற்றாரென்றால், திரு. பால்டுவினும் அதைப்போலவே மிகவும் சங்கடமான ஒரு காரியத்தை சாமர்த்தியமாய் சமாளித்துள்ளார். அது எட்டாம் எட்வர்டின் பட்டத்துறவே. திரு. பால்டுவினைப் போல் சாந்தமும் பொறையும் சாமர்த்தியமுமில்லாத ஒருவர் அச்சமயத்தில் பிரதம மந்திரியாயில்லாதிருந்தால், ஒரு முக்கோபி பிரதம மந்திரியாய் இருந்திருந்தால் நாட்டில் எவ்விதமான நிலைமை ஏற்பட்டிருக்கும் என்று இப்பொழுது ஊகிக்க இயலாது. திரு. பால்டுவின் தனது சாமர்த்தியத்தினாலேயே அதை சந்தடியில்லாது சமாளித்துவிட்டார். மற்றும் அவர் பிரதம மந்திரியாய் இருந்த காலத்து மற்றொரு சங்கடமான நிலைமையும் ஏற்பட்டது. சுமார் பத்து வருடங்கட்கு முன்பு இங்கிலாந்தில் பொதுவேலை நிறுத்தம் ஒன்று ஏற்பட்டது. அதனால் உணவுப் பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவதும் கஷ்டமாயிருந்தது. அந்த நிலைமையையும் அவர் சாமர்த்தியமாய் கையாண்டு சமாளித்தார். அயல்நாட்டு விவகாரம் சம்பந்தப்பட்டமட்டில் அவரது ஆட்சியில் போற்றத்தக்கது ஒன்றுமேயில்லை. அதற்கு சாமர்த்தியமற்றவர்களை அவர் அயல்நாட்டு மந்திரிகளாக நியமித்ததே காரணம். சர். ஜான்சைமன் அயல்நாட்டு மந்திரியாக வந்தது முதல் பிரிட்டிஷ் சர்க்காருக்கு

அயல்நாட்டு அரசாங்கங்களிடை செல்வாக்குப் போய்விட்டது. அதற்கு சீன—ஜப்பான் தகாறு சம்பந்தமாய் சர். ஜான்சைமன் கையாண்ட தப்பான கொள்கையே காரணம். இந்தியா சம்பந்தப் பட்டமட்டில் அவரது ஆட்சியில் இந்தியாவுக்கு, இப்பொழுது அமுலுக்கு வந்து அலங்கோலப்படும், சீர்திருத்தம் வழங்கப் பட்டதைத் தவிர வேறொரு நன்மையும் ஏற்படவில்லை. இந்தியா வைப்பற்றி அவர் அதிகமாய் பேசியதும் கிடையாது. திரு. பால்டு வின் ஆத்திரப்படாது மெதுவாகவே காரியம் செய்யும் சுபாவமுடை யவர். சீரிய ஒழுக்கமும் நடத்தையுமுடையவர். நாட்டில் பணமுடை ஏற்பட்டு அதனல் நாட்டின் நாணயத்துக்குப் பங்கம் ஏற்படுவது போன்றிருந்த சமயத்தில் அவர் தனது சொத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை (150000 பவுன்கள்) தேசியக்கடன் தீர்ப்புக்காக நன்கொடை யளித்துள்ளார். உண்மையில் தொழிலாளர்களிடம் அநுதாபமுடையவர். அவர் காலத்தில் ஏற்பட்ட தொழிலாளர் தகாறுகள் எல்லாம் திருப்தியாய் அதிக தொல்லைகள் விளைய இட மில்லாது தீர்க்கப்பட்டதற்கு அதுவே காரணம். தொழிலாளர்களை நேர்மையாய் நடத்தவேண்டுவது முதலாளிகளின் கடமை என்று அவர்கள் உணரும்படி கூறியவர். அவர் முதலில் 1908ம் வருஷம் பொதுமக்கள் கழக மெம்பரானர். அது முதல் நான் ராஜிநாமாச் செய்யும் வரை இடையில் முறிவில்லாது அதன் மெம்பராக இருந்துள்ளார். 1923ம் வருடம் முதன் முதலில் பிரதம மந்திரியானர் 1924ம் வருடத் தேர்தலில் தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வந்து விட் டமையால் அப்பதவியை விட்டுவிடும்படி நேர்ந்தது. 1931-ல் நாட் டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக அவர் திரு. ராம்சே மெக்டொனல்டுடன் சேர்ந்து தேசிய சர்க்கார் ஸ்தாபித் தார். 1935-ல் தேசிய சர்க்காரின் பிரதம மந்திரியானர். அவருடைய தேசத்தொண்டை பாராட்டி மன்னர்பிரான் அவருக்கு லார்டு பட்ட மும் நைட் (சர்) பட்டமும் வழங்கியுள்ளார். அவர் தனது அந்திக் காலத்தை மகிழ்ச்சியாய், சுகமாய் கழிப்பாராக.

திரு. ராம்சேமெக்டொனல்டு

அவருடன் பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவரான திரு ராம்சே மெக்டொனல்டும் தனது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார். திரு. ராம்சேமெக்டொனல்டும் உலகமெங்கும் தெரிந்தவர். பிரிட்டிஷ் தொழிற்கட்சியை வளர்த்து அக்கட்சியினரும் மற்றைய கட்சியினர் களைப்போல் அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்தக் கூடியவர்கள் என்பதை உலகமெங்கும் தெரியும்படிச் செய்த பெருமை அவருக்கே உரியது. அவர் தொழிற்கட்சியில் சில சிறு பதவிகளை வகித்துவந்து 1922-ல் பார்லிமெண்டு தொழிற்கட்சிக்குத் தலைவரானர். 1924-ல் அவருடைய கட்சியினர் பெருந்தொகையினராக தேர்தலில் வெற்றி

பெறவே அவர் பிரதம மந்திரியானார். ஆனால் அப்பொழுது அவர் சுமார் பத்து மாதங்கள்தான் அதிகாரத்திலிருக்க முடிந்தது. ஆனால் மீண்டும் 1929-ல் பிரதம மந்திரியானார். 1931-ல் நாட்டில் ஏற்பட்ட பணமுட்டடையை முன்னிட்டு எல்லாக் கட்சியாரையும் சேர்த்து தேசிய சர்க்கார் ஸ்தாபித்து அதில்தானே பிரதம மந்திரியாக இருந்தார். 1935-ல் கண் உபத்திரவத்தால் அப்பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு மந்திரி சபையில் சாதாரண மந்திரிகளில் ஒருவராய் இருந்தார். திரு பால்டுவின் பிரதம மந்திரியானார். திரு ராம்சேமக்டொனால்டு 1931-ல் தேசிய சர்க்கார் ஸ்தாபிப்பதை அவர் கட்சியினர் எதிர்த்தனர். அவர்களை ஒதுக்கி தன்னுடன் ஒரு சில தொழிற்கட்சி மெம்பர்களை சேர்த்துக்கொண்டு தேசிய சர்க்கார் ஸ்தாபித்ததால் தொழிற்கட்சியின ரிடையேயும் தொழிலாள ரிடையேயும் அவருக்கு சொல்வாக்கில்லாது போய் விட்டது அதனால் 1935-ம் வருடத் தேர்தலில் அவர் தோல்வியுற்றார். பின்னர் ஸ்காட்லந்து பல்கலைக் கழகங்கள் தொகுதியில் நின்று வெற்றிபெற்றார். திரு. ராம்சே சிறந்த அறிவாளிகளில் ஒருவர். அவர் பல புத்தகங்களும் எழுதியுள்ளார். அவர் பிற்காலத்தில் தொழிற்கட்சியிலிருந்து விலகியே நிற்கும்படி நேர்ந்துவிட்டமையால் தொழிலாளருக்கு எதுவும் சேவை செய்ய முடியாமற் போய் விட்டது. அவர் ராஜிநாமாச் செய்தபோது அவருடைய தொண்டைப் பாராட்டும் முகமாக அவருக்கு பிரபு பட்டம்வழங்க விரும்புவதாய் மன்னர்பிரான் கூறினார். அது தனக்கு வேண்டாம் என்று மறுத்துவிட்டார். தொழிலாளியாக இருந்து சோஷியலிசக் கொள்கையிலே (சமத்துவம், சகோதரத்துவம்) வளர்ந்தவர் எப்படி ஒரு பிரபு பட்டத்தை ஏற்பார்?

புதிய பிரதம மந்திரி

இப்பொழுது புதிய பிரதம மந்திரியாக, பொக்கிஷ மந்திரியாக இருந்த திரு நெவயில்சேம்பர்லெயின் வந்துள்ளார். இவரோ கன்சர்வேட்டிவ் கட்சியில் 'டைகார்ட்' (மாறுதல் வேண்டாக்) கூட்டத்தை சேர்ந்தவர். மற்றும் புதிய மந்திரி சபை யமைப்பில் இந்தியாவுக்கு சாதகமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. ஜெட்லந்து பிரபுவேதான் இந்தியா மந்திரியாய் இருக்கிறார். ஆனால் இந்தியா உதவி மந்திரியாய் இருந்த திரு. பட்லருக்குப் பதில் லார்டுஸ்டான்லி இந்தியா உதவி மந்திரியாய் நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதம மந்திரி 'டைகார்ட்' கூட்டத்தை சார்ந்தவராய் இருப்பதாலும், இந்தியா மந்திரி பதவியில் மாறுதலில்லா திருப்பதாலும் இப்புதிய ஆட்சியில் இந்தியாவுக்கு விரைவில் விமோசனம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

அமெரிக்க வள்ளல் மறைந்தார்

அமெரிக்காவின் வள்ளலான (பெரிய) திரு ஜான். டி. ராக்பெல்லர் சென்ற மாதத்தில் தனது 97-ம் வயதில் காலஞ் சென்றார். அவருடைய மரணத்தால் பொதுவாக உலகமே ஓர் பரோபகாரியையும் குறிப்பாய் அமெரிக்கா ஓர் வள்ளலையும் இழந்துவிட்டது. நம் நாட்டில் முதல் எழு வள்ளல்கள் கடை எழு வள்ளல்கள் என சிறந்த கொடையாளர்களிருந்ததாக நம்தேச சரித்திரங்களிலும் காவியங்களிலும் நாம் படிக்கிறோம். ஆனால் திரு. ராக்பெல்லரோ நாம் நம் கண்முன் காணும் வள்ளலாய் விளங்கினார். அவர் பல அறச்செயல்களுக்கு நன்கொடை யளித்துள்ள பெருந்தகை. அவர் வியாபாரத்திலேதான் திரவியம் திரட்டியவர். சுமார் 30 ஆண்டுகட்கு முன்னர் வியாபாரத்திலிருந்து விலகினார். அவர் விலகும்போது அவருக்கு எவ்வளவு சொத்திருக்கும் என்று எவராலும் நிச்சயமாய் கணக்கிட்டு சொல்ல முடியாதிருந்தது ஆனால் அவருக்கு 20 மேல் 48 கோடிகள்வரை சொத்திருக்குமென்று மதிப்பிடப்பட்டது அவர் தர்மத்திற்காக 12 கோடி பவுன்கள் செலவழித்திருப்பதாய் கூறப்படுகிறது. அவர் வைத்திய ஆராய்ச்சிக்கு 2½ கோடி பவுன்கள் கொடுத்துள்ளார். அவருடைய பெயரால் இந்த ஆராய்ச்சி இன்று உலகமெங்கும் நடைபெறுகிறது மற்றும் கல்வியை பரப்புவதற்கும் பெருந்தொகை நன்கொடை யளித்திருக்கிறார். அவர் சென்ற ஆண்டில் தனது 96-ம் பிறந்த நாளை கொண்டாடியபோது, தான் நூறாண்டுகள் ஜீவித்திருக்கப் போவதாகவும், தனது நூறுமாண்டுப் பிறந்த நாளை தான் கொண்டாட விரும்புவதாயும் கூறினார். அவருடைய அந்த மனோபீஷ்டம் நிறைவேறாது போய் விட்டது. அவருக்கு ஒரு குமாரரும் ஒரு குமாரியும் இருக்கின்றனர். அவருடைய ஆன்மா அமைதி பெறுவதாக.

வின்சர்கோமான் திருமணம்

அரசப் பட்டந்துறந்து இப்பொழுது வின்சர்கோமான் என்னும் பெயருடன் விளங்கும் எட்டாம் எட்வர்டுக்கும் மிஸஸ், சிம்சனுக்கும் 3—6—37-ல் பிரான்சு நாட்டில் டூர்ஸ் என்னுமிடத்தில் திருமணம் நடந்தேறியுள்ளது.

முருகன்:—நாளைக்கு ஸ்கூல் இருக்காதாமே. உனக்கு அதைப் பற்றித் தெரியுமோடா?

சுப்பன்:—ஸ்கூல் எங்கேயும் போகாதுடா. அங்கேயேதானே இருக்கும்!

—T. A. செல்லமுத்து.

ஆ! அந்த காதற் கடிதம்

['குமாரன்']

காலை மணி 10. எதிர்வீட்டு சுவர் கடிகாரம் 'டங்டிங்' என்ற ஓசையோடு தன் கடமையைச் செய்துவிட்டது. தெருவாயிற் படியில் கிழக்கு நோக்கித் தன் விழிகளைச் செலுத்திக்கொண்டு நிற்கிறான் அந்த வாலிபன். உள்ளிருந்து அவனது தாயின் அழைப்பு வந்து கொண்டிருக்கிறது காப்பி சாப்பிடத்தான். 'இதோ வந்துவிட்டேன்' என்று மட்டும் அவன் வாய் சொல்லிக்கொண்டுதானிருக்கிறது. ஆனால் அவனது கால்கள்மட்டும் அவனை உள்ளே அழைத்துச் செல்ல விரும்பவில்லை.

காத்திருந்து பயன்படாமலில்லை. அதோ அவனும் வந்துவிட்டான். கையில் ஒரு கடிதம் வைத்திருக்கிறான். 'ஆம் அது எனக்காகத்தானிருக்கும்' என்று வாலிபன் முணுமுணுக்கிறான். தபாற்காரனும் அருகில் வந்தான்; வாலிபன் கைக்குக் கடிதமும் வந்தது.

நான்கு மூலைகளுள்ள ஒரு நீண்ட சதா உறைதான் அது. எந்தத் தபாலாபீஸிலும் யாரும் ஒரு அணாவுக்கு வாங்கக் கூடியதுதான். வழக்கத்தாலோ, பழக்கத்தாலோ முகப்பின் தலைப்புற மூலையிலே தனக்கிடஞ் செய்துகொண்டு வீற்றிருக்கும் ராஜா தலையையுடையதுதான்.

கடிதத்தைக் கையில் பெற்றதே அந்தத் தலையை ஒருமுறை பார்த்தான். கடிதம் தான் எதிர்பார்த்த இடத்திலிருந்து வந்ததுதானா என்று அறியத்தான். (காதலர் கடிதங்களில், அனுப்புபவர் விலாசம் உறைமீது குறிக்கப்பட்டிருக்காதல்லவா?)

தலைமீது சரியாக முத்திரை விழாவிட்டால்கூட இருக்கப்பட்ட எழுத்துக்களைக்கொண்டு ஊரைக் குறிப்பாய்க் கண்டறிந்து கொண்டான். ஆ! என்ன களிப்பு! என்ன ஆனந்தம்! எத்தனை உள்ளக் கிளர்ச்சி!

'வரட்டுங்களா சார்!' என்று மாமூல்படி விடைபெற நின்ற தபாற் சேவகனுக்குப் பதில்கூறக்கூட மறதி. அல்லது ஒரு மௌன சிக்கம்பம்! உள்ளத்திலே உணர்ச்சியின் வேகம்! ஒரு பெருத்த ஆவேசம் என்றும் பொருந்தும். விரல்கள் விரைவாக உறையைக்

கிழிக்கின்றன; அப்போதுள்ள பதட்டத்திலும் கொஞ்சம் நிதான மாக, உறை சேதமாகாமல்............

உறையாலே என்ன பயன்? உள்ளிருக்கும் கடிதந்தானே முக்கியமானது என்று நண்பர்கள் நினைக்கலாம்!—அந்த உறை....... அருமைப் பொன்காத்தால் தீண்டப்பட்டதல்லவா? அல்லாமலும் அந்த மேல்விலாசத்திலுள்ள முத்துப்போன்ற எழுத்துக்களை வீணுக்க யாருக்குத்தான் மனம் வரும்!

'ஆ! உள்ளே எவ்வளவு பளபளப்பான கடிதம்! என்ன நாசுக்கான மடிப்பு! ஆனல் இதையெல்லாம் கவனிக்க அவனுக்கு நேரமேது? உள்ளத் துடிதுடிப்பில் எத்தனையோ நினைவுக் காட்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன.'

கடிதத்தின் தலைப்பிலே என்ன இன்பமான அழைப்பு!— என் ஆருயிர்க் காதலரே! ஆ! என்ன வாஞ்சை! எத்துணை ஆசை! என்னே அவள் கொண்டுள்ள பற்று! இன்பஞ் சொட்டச் சொட்ட அழைக்கும் அந்த அமுத மொழிகண்டு அவன் சொக்கிப் போனதில் வியப்பென்ன?

இல்லை இல்லை. அவனது ஆசை விழிகள் அந்த அழைப்புச் சொல்லமுதத்தைப் பருகியபடி நின்றுவிடவில்லை. உள்ளத்தின் வேகத்தையொட்டியே பார்வையும் விரைந்தோடிக் கொண்டிருக் கிறது.

முதலில் உடல்நலச் செய்திகள் தங்கள் நலம் அறிய எனக்கு மெத்த ஆவல். ஆகா! என்ன மதுரமான சொற்கள்! 'மெத்த ஆவல்' என்ற அந்த சொற்களிலே எவ்வளவு பொருள் ஆழம்! என்ன அழகு செறிந்த, உணர்ச்சி மிகுந்த ஓசை!

அப்பால்தான் காதல் சித்திரம். வெறுங் கற்பனையல்ல. அவள் நெஞ்சின் உண்மைப் படந்தான் அது. பேச்சு நடையிலேயே கள்ளங் கபடமற்ற சொற்களால் மிகத் தெளிவாக அது தீட்டப் பட்டுள்ளது.

உளம் உருக, உடல் உருக, உயிர் உருகப்படித்தான். அந்த எழுத்தோவியத்திலே அவன் உள்ளம் ஒன்றிப் போயிருந்தது. கண்களுடன் கருத்தும் லயித்துப் போயிற்று. வேறு நினைவற்ற வனாய் அந்தச் சொல்வடிவே தன்னுருவாய் நின்றிருந்தான்.

சில நிமிஷங்கள் சென்றன. ஆ! என்ன அற்புதம்! என்னே காதலின் வன்மை! என்னை நினைந்து நினைந்து உருகும் அவள் இள நெஞ்சு! அப்பா! என்ன கொடிய சுபாவம் இந்தக் காதலுக்கு! அவளது பூமேனியும், மிருதுவான இருதயமும் என் பொருட்டு வாடி வதங்குவதென்றால், வெம்பியுலர்வதென்றால் ஐயோ! என்னுற் சகிக்க முடியவில்லையே! அழகு வழிந்தோடும், நிலவைப் பழித்த அந்தச் சுந்தரமுகம் குழைந்து கருகுமானல் ஆ! நான் என்ன செய்

வேன்? எப்போது நான் அவளைக் கண்டு அவளது உள்ளத்துயரை ஒழிப்பேன்?........'

இவ்வாறு வாலிபனின் மனம் வருந்துகிறது. அந்த திருமுகத்தில் (கடிதத்தில்) அவளது திருமுகம் காண்கிறான். அதிலுள்ள ஒவ்வொரு சொல்லும் அவளது கனிவாய் முத்தென அவனுக்குத் தோன்றுகிறது.

கீழே முடிவில் தங்கள் பாதகமலங்களைத் தியானித்துக்கொண்டிருக்கும்........என்ன பணிவு! என்ன வணக்கம்! அன்பும் பணிவும் ஐக்கியமானதுபோல் என்ன அழகான சொற்றொடர்!

ஆ! கடைசியிலேயுள்ள அந்தக் கையெழுத்து! என்ன நேர்த்தி! கண்களிலே ஒற்றிக் கொள்ளத்தக்க அத்துணை பெருமை வாய்ந்தது. அந்த அழகிய கையெழுத்திலே அவளது திவ்விய மோகன உருவம் பிரதி பலிக்கிறதே! எழுத்துக்கள் யாவும் அவளது ரூபலாவண்யத்தையே உரித்துக்கொண்டு பிறந்திருக்கின்றனபோல் காண்கின்றனவே!

ஒருமுறை படித்தாயிற்று; இரண்டு மூன்று தடவையும் ஆயிற்று; ஆயினுமென்! ஒவ்வொரு முறையும் ஒரு நூதன பொருள், ஒரு நூதன வனப்பு, ஒரு நூதன உணர்ச்சி, ஒரு நூதன கவர்ச்சி—கடிதத்தை உறையில்போட மனமில்லை. கடிதத்தில் அவளது அலங்காரவடிவம் அவனுக்குப் புலப்படுகிறது. அவளது நீலோற்பல நயனங்கள் அவனை ஆர்வமுடன் நோக்குகின்றன; அவளது மதுரவாய் அவனுடன் தன் தீங்குரலால் பேசுகிறது. அவளது பூங்கையின் ஸ்பரிசங்கூட அவன் உடலில் மின்சாரம்போல் பாவுகிறது. இன்னும் அவன் எத்தனையோ கனவுகளுக்கெல்லாம் ஆளாகிறான்.

அன்பர்களே! இவ்வளவிற்கும் காரணம் யாது? ஆ! அந்தக் காதற் கடிதந்தான்!

ஸ்ரீ வீர. சுப்பைய சுவாமிகள் சமாதி ஆலய மகா கும்பாபிஷேகம்

சென்னை சூளை ஆனந்தாசிரமத்தில் எழுந்தருளி அரிய உபந்நியாசங்களாலும் பெரிய ஆன்ம புராண முதலிய நூல மொழி பெயர்ப்புகளாலும் பரோபகாரம் புரிந்துவந்த ஸ்ரீமத் வீர. சுப்பைய ஞானதேசிக சுவாமிகள் சென்ற பிரஜோத்பத்தி வருஷத்தில் பரிபூரணமடைந்து ஷை இடத்தில் சமாதி வைக்கப்பட்டு அதற்கு பல அன்பருதவியால் ஆலயமும் மகேசுவர பூஜா மண்டபமும் நூதனமாயமைப்பித்து நானது ஈசுவர௵ ஆனி௴ 14௳ (27—6—37) ஆதிவாரம் காலை 7-மணிக்குமேல் 7½-மணிக்குள் ஷை ஆலய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஆதலால் அன்பர்கள் அனைவரும் வந்து அதை கண்ணுற்று இன்புறுமாறு வேண்டப்படுகின்றது. அதற்கு வெளியூரிலிருந்து பல பெரியார்கள் வருவார்களென்று தெரிகிறது.

வெகுமதி

[அம்மாஞ்சி]

அன்றைய தினம் சென்னை பிராட்வே டாக்கீஸில் ‘மனோஹரா’. சங்கரன் B. A. ஒரு சினிமா பயித்தியம் என்பது ஒருவரும் அறியாதது அல்ல. வழக்கம்போல் சங்கரன் ‘மனோஹரா’ இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டு தன் வீட்டை நோக்கி வந்துகொண்டு இருந்தான். இடியும், மின்னலும், காற்றும் மழையுமாக கிளம்பின. சங்கரன் கையில் குடையும் இல்லை, கொங்காணியும் இல்லை. மழையில் நனைந்துகொண்டே வந்துகொண்டிருந்தான். இதுவரையில் சாதாரணமாக இருந்த மழையும் காற்றும் பலமாக வரவே சங்கரன் எங்கேயாவது தங்கிவிட்டுப் போகலாம் என்று யோசனை செய்துகொண்டு மெல்ல ஒரு வீட்டில் போய் தங்கினான். மழையோ விடுவதாய் காணோம். சாரலும் அதிகமாக அடிக்கவே சங்கரன் அவ்வீட்டுத் திண்ணையின்மேல் ஏறிக்கொண்டான். அவ்வாறு திண்ணையில் ஏறின சங்கரன் யாரோ உரத்த குரலுடன் பேசுவதைக் கேட்டான். சாத்தப்பட்டிருந்த ஜன்னலில் காதை வைத்துக்கொண்டு உற்றுக் கேட்டான். அப்போது யாரோ ஒருவர் பின்வருமாறு சொன்னது கேட்டது. ‘பெண்ணே, நான் எவ்வளவு சொல்லியும் ஒரே பிடிவாதமாக இருக்கிறாய். போனால் போகிறது என்று பார்த்தால் நீ ஒன்றுக்கும் இணங்கமாட்டாய் என்று தோன்றுகின்றது. ஒரு பூவை கசக்கி முகர்வதைவிட கசக்காமல் முகர்வது நலம் என்று பார்த்தேன். இன்னும் ½ மணிக்குள் உனது பதில் கிடைக்காவிடில் எனக்கு உதவாத உன்னை சுட்டுக் கொன்று விடுவேன்’. உடனே ஒருபெண் குரல் ‘அடே சண்டாளா! துரோகி! ஒருபோதும் நான் உனது எண்ணத்திற்கு உடன்படமாட்டேன். நான் இங்கிருப்பது எனது பார்த்தாவுக்குத் தெரிந்தால் தக்க போலீஸ் உதவியுடன் வந்து உன்னைத் தண்டிப்பார்’ என்றது. அதற்குள் முதலில் பேசிய குரல் ‘அடி சிறுக்கி, உனக்கு அவ்வளவு ஆணவமா? போலீஸார் வந்து என்னை என்ன செய்துவிட முடியும்? சரி, உன்னிடம் வீணில் வாதாடுவானேன்? நான் சென்று இன்னும் ½ மணிக்குள் வருகிறேன். பிறகு உன்னுடைய உயிர் உன்னுடையதா, எமனுடையதா என்பதை முடிவு செய்வோம். நான் சென்று வருகிறேன்’ என்று கூறியது.

மேற்கூறிய சம்பாஷணையைக் கேட்ட சங்கரன் திடுக்கிட்டான். பிறகு சமாளித்துக்கொண்டான். வெகுநாளாய் தான் துப்பறிவோனாகவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த தனக்கு அன்று நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணி எண்ணி ஆனந்தித்தான். எவராலும் பிடிக்கமுடியாது என்று சொன்ன திருடனைப் பிடித்து போலீஸார் வசம் ஒப்புவித்தால் தனக்குச் சிறந்த வெகுமதி கிடைக்கும் என்றும் தனக்கு துப்பறிவோன் என்னும் பெயர் கிடைக்கும் என்றும் எண்ணினான். ½ நிமிஷம் கூடத் தாமதியாமல் நேரே போலீஸ் ஸ்டேஷனை அடைந்தான். உள்ளே சென்றதும் அங்கே தூங்கிக்கொண்டிருந்த ஜவானை எழுப்பி 'இன்ஸ்பெக்டர் இருக்கிறாரா?' என்றான். 'யாரையா அது, தாலி வாங்கிற சமயத்தில் வந்து எழவு எடுக்கிறது' என்று அதட்டினான் அந்த ஜவான். 'அப்பா, கோபித்துக் கொள்ளாதே. அங்கே ஒரு கொலை நடக்கும்போல் இருக்கிறது. அதை இன்ஸ்பெக்டரிடம் சொல்லலாம் என்று வந்தேன்' என்றான் சங்கரன். உடனே அந்த ஜவான் ஓட்டமாய் ஓடி உள்ளே தூங்கிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரை மிகுந்த பிரயாசையுடன் அழைத்து வந்தான். பிறகு இன்ஸ்பெக்டர் சங்கரன் எட்டு ஜவான்கள் ஆகிய எல்லோரும் கொலை நடக்கப்போகும் வீட்டை நோக்கி விரைவாக சென்றுகொண்டிருந்தனர். அப்போது பின்வருமாறு அக்கொலைகாரன் சொன்னது தெளிவாய்க் கேட்டது. 'போலீஸ் போலீஸ் என்று பிதற்றுகிறாயே, எவன் இங்கு வரப் போகிறான்? இன்னும் ஒரு நிமிஷம்தான். நான் சொல்வதற்கு உடன்படுவாயா? இல்லையா?' இதைக் கேட்ட இன்ஸ்பெக்டர் 5 ஜவான்களை வீட்டை சுற்றி நிற்கும்படி சொல்லிவிட்டு அதிகார தொனியுடன் 'யாரது உள்ளே? கதவைத் திற' என்று சொன்னார். உடனே உள்ளே இருந்து 'ஸார், இங்கு ஒருவரையும் உள்ளே வர அனுமதிப்பது இல்லை' என்று ஒரு குரல் கேட்டது. இன்ஸ்பெக்டர் சந்தேகம் தீர்ந்தது. 'அடே கொலைகாரா கதவை திறக்கிறாயா இல்லையா?' என்று வெளியில் இருந்த எல்லோரும் சப்தம் போட்டனர். உள்ளே இருந்தவர்கள் என்ன நினைத்தார்களோ என்னவோ, கதவு உடனே திறக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் ஆவேசத்துடன் உள்ளே நுழைந்தார். ஆ! ஹா! அவர்கள் கண்டது என்னவென்றால் 'பகல் பகதூர் புளுகண்ண முதலியார் எழுதிய பூச்சாண்டித் தேவன்' என்னும் புதிய நாடகத்தை நடிக்கப் பழக்கம் செய்துகொண்டு இருந்தனர். இதைப் பார்த்தது தான் தாமதம். சங்கரன் உடனே அங்கிருந்து ஓட்டம் பிடித்தவன் வீட்டில் வந்துதான் நின்றான்.

கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

அத்தியாயம் 28.

திங்கட்கிழமை முதல் விசாரணை

மங்களபுரியின் நீதிஸ்தலத்தில் நீதிபரிபாலன சபையார் ஒரு திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடினர். மூச்சுவிட இடமின்றி எங்கும் ஜனத்திரள். கமலகாந்தனும் கொண்டுவரப்பட்டான். அவன் தரப்பில் விவாதிக்க அட்வகேட் மிஸ்டர். பாலாஜிராவ் அவர்களும் மற்றத் தரப்பிற்கு சீமைத்துரைமகனை எட்வின் என்பவரும் ஆஜராகி யிருந்தனர்.

பலர் பலப்பல விதமாகப் பேசலாயினர். ஒரு கூட்டத்தார், 'காமம் கொடிது. பெண்ணாசை கொலைமட்டுமல்ல, இன்னும் அடாத காரியம் செய்யவும் தூண்டும்' என்று பேசிக்கொண்டனர். மற்றொரு சாரார் 'சீமைத்துரைமகன் எட்வின் பலே பேர்வழி. நிச்சயம் அவன் கக்ஷியே ஜெயிக்கும்' என்று பேசிக்கொண்டனர். மற்றொரு பாலார், 'அட்வகேட் மிஸ்டர். பாலாஜிராவ் அபாரசமர்த்தர். அவரை வெல்ல யாராலும் முடியாது' என்றனர். இவ்வாறாக பலர் பலப்பல விதமாகப் பேசிக்கொண்டனர்.

'சத்தம் செய்யாதீர்கள்' என்று ஒரு சத்தம் கிளம்பியது. எங்கும் நிசப்தமே குடிகொண்டது. நீதிபதி எட்வின் துரையை நோக்கி, 'உங்களின் விவாதத்தை எடுத்துரையுங்கள்' என்றார்.

எட்வின்-துரை:—கனம் நியாயாதிபதியவர்களே! நான் அதிகமாகக் கூறிக் காலத்தைப்போக்க விரும்பவில்லை. கமலகாந்தன் குற்றவாளி. இதனை நிரூபிக்க சாக்ஷிகளாக போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களையும், பிரேதத்தை சோதனைசெய்த டாக்டரவர்களையும் நிறுத்துகின்றேன். பிறகு, கமலகாந்தாவிற்கு விவாகம் நடைபெறப் போவதை யறிந்த கைதி மேலமாடவீதி 49 நம்பர் பாழடைந்த வீட்டில் காலை ஏழுமணிக்கு தன்னை சந்திக்கும்படி அவளுக்கு கடிதமெழுதி யிருக்கிறான். அக்கடிதப்படி கமலகாந்தா அங்கு வந்திருக்க வேண்டும். கமலகாந்தனும் அங்கு சென்றுள்ளான். பின்பு தன்னுடன் எங்கா

வது தலைமறைவாய் வசிக்கலாமென்று அவளை வற்புறுத்தியிருக்க வேண்டும். ஒருவேளை கமலகாந்தா உடன்பட்டிருக்க மாட்டாள். எனவே, கமலகாந்தன் சினமுற்று அவளைக் கொலை செய்திருக்க வேண்டும்' என்றார்.

பின்பு முதலாவது சாக்ஷியாகிய இன்ஸ்பெக்டர், அங்குற்று 'சத்தியமாகக் கூறுகின்றேன், நான் போலீஸ் ஸ்டேஷனிலிருந்த பொழுது சோமநாத முதலியார் எனக்கு தகவலனுப்பியிருந்தார். உடனே அவர் வீட்டிற்குச் சென்றேன். கமலகாந்தா காணப்பட வில்லை. உளவறியும் பொருட்டு அவள் படிக்கும் இடத்தை சோதனை யிட்டேன். ஒன்றும் புலனாகவில்லை. பின்பு மேஜையைத் திறந்தேன். அதில் அட்வகேட் கூறிய விஷயமுள்ள கடிதமிருந்தது. அதன்படி மேலமாடவீதி 49 நம்பர் பாழடைந்த மாளிகைக்கு போலீஸ்வீரர் களுடன்சென்று பார்த்தபொழுது கமலகாந்தாவின் முண்டமும் அதனருகில் இரத்தக்கறை படிந்த பட்டாக்கத்தியும் அழுதகண்களும் சிந்தியமூக்குமாய் கமலகாந்தனும் இருக்கக் கண்டு, உடனே காவல் முதலிய ஏற்பாடு செய்துவிட்டு, பிரேத சோதனையின் பொருட்டு டாக்டரை அழைப்பித்தோம். அப்பொழுது துப்பறியும் மிஸ் சரோ ஜினியும் அங்குவந்தாள். டாக்டர் பிரேத சோதனை செய்தார். மிஸ். சரோஜினி அங்கொரு மூலையில் கிடந்த காகிதத்துண்டுகளைக் கவனித்தாள். அதனையும் விசாரித்தேன். பிரேதசோதனையும் முடிந்தது. கமலகாந்தனை கைது செய்தோம். இவ்வளவுதான் எனக்குத் தெரியும்' என்றார்.

பின்பு பாலாஜிராவ் தனது குறுக்கு விசாரணையை ஆரம்பிக்கும் பொழுது, 'தாங்கள் யார்?' எனக் கேட்டார்.

இன்ஸ்பெக்டர்:—நான் யாரென உங்களுக்குத் தெரியாதோ?

பாலாஜிராவ்:—தயவுசெய்து கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதிலளியுங்கள்.

இன்ஸ்பெக்டர்:—நல்லது. நான் தற்பொழுது போலீஸ் இன்ஸ் பெக்டராக வேலைபார்த்து வருகிறேன்.

பாலாஜிராவ்:—தங்கள் பெயர்?

இன்ஸ்பெக்டர்:—புல் புல் போஸ்.

பாலாஜிராவ்:—எத்தனை வருடமாக இந்த உத்தியோகம்?

இன்ஸ்பெக்டர்:—சுமார் இருபத்தைந்து வருடகாலமாக.

பாலாஜிராவ்:—மேலமாடவீதி 49-நம்பர் வீட்டில் டாக்டர் பிரேதசோதனை செய்துகொண்டிருக்கும் பொழுது, மிஸ் சரோஜினி

ஏதோ காகிதத் துண்டுகளைக் கண்டு எடுத்ததாகக் கூறினீர்களல்லவா? அது வாஸ்தவம்தானே?

இன்ஸ்பெக்டர்:—ஆம்.

பாலாஜிராவ்:—தாங்கள் அக்கடிதத் துண்டுகளைக் கவனியாது விடுத்ததற்குக் காரணம் தங்களின் கவனக்குறைவுதானே?

இன்ஸ்பெக்டர்:—யானைக்கும் அடிசருக்கு மன்றோ?

பாலாஜிராவ்:—அவைகளை நான் கேட்கவில்லை. கேட்ட கேள்விக்கு மட்டும்தான் பதில் வேண்டும்.

இன்ஸ்பெக்டர்:—அப்படியே யாகட்டும், கேட்கலாம்.

பாலாஜிராவ்:—அக்கிழிந்த காகிதத்துண்டில் என்ன விஷயம் எழுதப்பட்டிருந்தது? அறிவீர்களோ?

இன்ஸ்பெக்டர்:—அறிய முனைந்தேன். ஆனால் அத்துண்டுகள் மிகச் சிறிதானமையால் சேர்த்து அறியக்கூடாது விடுத்தேன்.

பாலாஜிராவ்:—கமலகாந்தன் குற்றவாளி என்று கூறுவீர்களா?

இன்ஸ்பெக்டர்:—கூறுவேன்!

பாலாஜிராவ்:—எவ்வாறு?

இன்ஸ்பெக்டர்:—கையும் களவுமாய்க் கண்டபின் என்ன சந்தேகம்?

பாலாஜிராவ்:—நன்று; முக்கிய சான்றுகள்?

இன்ஸ்பெக்டர்:—ஆம். அவனால் எழுதப்பட்ட கடிதம்.

பாலாஜிராவ்:—அக்கடிதம் அவனால்தான் எழுதப்பட்டிருக்குமென்று நம்புகிறீர்களா?

இன்ஸ்பெக்டர்:—ஆம்.

பாலாஜிராவ்:—அவன் கொலை செய்திருந்தால், அவ்விடத்தில் தைரியமா யிருக்கமுடியுமோ?

இன்ஸ்பெக்டர்:—தன்னை குற்றமற்றவன் என்று நம்பும் பொருட்டு அவ்வாறு நடித்திருப்பான்.

'நன்று! நியாயாதிபதியவர்களே! அடுத்த சாக்ஷி டாக்டர் இனி விசாரிக்கப்படலாம்' என்றார் பாலாஜிராவ்.

உடனே அட்வகேட் எட்வின்துரை தன் தாப்புசாக்ஷியாகிய டாக்டரை நோக்கி, 'இந்த வழக்கில் நீங்கள் அறிந்தவற்றைக் கூறுங்கள்' என்றார்.

'ஆண்டவன்மேல் ஆணையிட்டு உண்மையைக் கூறுகின்றேன். என்னை இன்ஸ்பெக்டர் புல்புல்போஸ் அவர்கள் மேலமாடவீதி 49 நம்பர் பாழடைந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றார். அங்கு தலையற்ற பிரேதம் கிடந்தது. அருகில் ரத்தம் தோய்ந்த பட்டாக்கத்தி கிடந்தது. கைதி அழுதவண்ணமிருந்தான். நான் சோதனை செய்ததில் 'கொலை' என்ற முடிவுக்கு வந்தேன்' என்றார்.

நியாயாதிபதி அட்வகேட் பாலாஜிராவை நோக்கி, 'இவரை குறுக்கு விசாரணை செய்யவிரும்பினால் செய்யலாம்' என்றார்.

பாலாஜிராவ்:—நீங்கள் ஒரு டாக்டரா?

டாக்டர்:—அனாவசியமான கேள்விகளைக் கேட்டு அவமானப் படுத்த முயல்வது சரியல்ல.

பாலாஜிராவ்:—அதைப்பற்றி கவலை கொள்ளவேண்டாம். கேட்ட கேள்விகளுக்கு பதில் கூறுங்கள்.

டாக்டர்:—நன்று. நான் ஒரு டாக்டர்தான்.

பாலாஜிராவ்:—தங்கள் பெயர்?

டாக்டர்:—என் பெயருக்கும் இந்த வழக்கிற்கும் என்ன சம்பந்தம்?

பாலாஜிராவ்:—மறுபடியும் ஆரம்பித்து விட்டீர்களே! கேட்ட கேள்விகளுக்கு மட்டும் பதில் கொடுங்கள்.

டாக்டர்:—நல்லது. என் பெயர் மோஹன்லால்.

பாலாஜிராவ்:—தாங்கள் எத்தனை வருடகாலமாக இத்தொழில் செய்கிறீர்கள்?

டாக்டர்:—சுமார் பத்துவருட காலமாக.

பாலாஜிராவ்:—பிரேத சோதனை செய்தீர்களல்லவா?

டாக்டர்:—ஆம்.

பாலாஜிராவ்:—'கொலை' என்ற முடிவிற்கு வந்தீர்களல்லவா?

டாக்டர்:—ஆம்.

பாலாஜிராவ்:—பிரேதம் தலையற்றுத்தானே இருந்தது?

டாக்டர்:—ஆம்.

பாலாஜிராவ்:—தலையற்ற பிரேதத்தை கண்டவுடனேயே கொலையென்று சொல்ல முடியாதோ? சோதனை அவசியமோ?

டாக்டர்:—சொல்லிவிடலாம்.

பாலாஜிராவ்:—அப்படியானல் பத்துவருடகால உத்தியோக அனுபவமுள்ள தாங்கள் சோதனை செய்வானேன்?

டாக்டர்:—இன்ஸ்பெக்டர் சோதனைசெய்து பார்க்கச் சொன்ன தால் செய்தேன்.

பாலாஜிராவ்:—வேறு அப்பிரேதத்தில் எங்கேனும் ஊறுபட் டிருந்ததா?

டாக்டர்:—இல்லை.

'நன்று, கனம் நீதிபதியவர்களே! தாங்கள்மேல் நடத்தலாம்' என்றார் அட்வகேட் பாலாஜிராவ்.

'உமது இறுதி உரை நடக்கலாம்' என்றார் நீதிபதி எட்வின் துரையைப் பார்த்து.

உடனே எட்வின்துரை எழுந்து, 'நீதிபதியவர்களே! கமலகாந் தாவின் மேஜையிலிருந்த கடிதம், கமலகாந்தனை அவனை மேலமாட வீதி 49 நம்பர் வீட்டிற்கு வரும்படி செய்தான் என்பதற்கு போதிய அத்தாக்ஷியாகும். அவ்வாறே அங்குவந்த மங்கை தலையற்ற முண்ட மாய்க் கிடந்தாள். அவளை டாக்டர் பரிசோதனை செய்ததில், 'கொலை' என்று முடிவுசெய்தார். நாங்கள் சென்ற சமயத்தில், சந்தேகப் பேர் வழியான கமலகாந்தன் அங்கு காணப்பட்டதால், அவன்தான் கொலை செய்தான் என்பதற்கு சந்தேகமில்லை' என்றார்.

'நியாயாதிபதி அட்வகேட் பாலாஜிராவை நோக்கி, 'தங்களின் இறுதி அபிப்பிராய மேதுமிருப்பின் கூறலாம்' என்றார்.

'நியாயாதிபதியவர்களே! நண்பர் எட்வின்துரை ஜோடித்த வழக்கு நம்பக்கூடியதாக விருந்தாலும், நான் கமலகாந்தன் நிரபராதி என்றே கூறுகிறேன். பலசான்றுகள் உளவாயினும் முக்கியமாக தான் முழுமனதுடன் காதலித்த ஒரு பெண்ணை கொலைசெய்ய எவனும் துணியான். அவ்வாறே கொலை செய்ததாகக் கொண்டாலும் கொலை செய்தவன் எங்காவது பிரேதத்தைக் கிடத்திக்கொண்டு புலம்பிக் கொண்டிருப்பானே? அது முடியாத காரியம். கமலகாந்த னின் விரோதிகள் யாராவது அவனை தந்திரமாக அங்குவர ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அன்றியும் அவன் வருமுன்பு, கமலகாந்தா வையும் அங்கு வரச்செய்து கொலை செய்திருக்கவேண்டும். பின்பு வந்த கமலகாந்தன் தனது காதலி மடிந்து கிடந்ததைக் கண்ணுற்று வருந்திக் கொண்டிருந்திருப்பான். அந்நிலையில் அவனைக் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் அவனே கொலை செய்ததாகக் கருதி குற்றம் சாட்டிவிட்டார். இதனை நன்கு யோஜித்தால் கமலகாந்தன் நிரபராதி என்பது தெற்றென விளங்கும். நிற்க, துப்பறியும் மிஸ். சரோஜினியும் கோர்ட்டு கலைவதற்குள் சாக்ஷியம் கூறவருவாள்.

ஆனால் நேரம் அதிகமாகியும் இன்னும் அவள் வராக்காரணத்தால், நாளைத்தினம் அவளையும் விசாரித்து தங்கள் முடிவைத் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டுகின்றேன்' என்றார் பாலாஜிராவ்.

இவ்வாறுகூறக் கேட்ட எட்வின்துரை, நீதிபதியை நோக்கி, 'அவளுக்கு சாக்ஷிசொல்ல ஹேதுவிருந்தால், வருவதாகச் சொன்ன வள் வாராமலிராள். இனி வழக்கை தாமதிப்பது உசிதமல்ல. ஆகை யால் இன்றே முடிவு வேண்டும்' என்றார்.

மாலை மணி ஐந்தாயிற்று. நீதிபதியும் அவர் குழாமும், தீர்ப் பைப்பற்றி யோஜிக்கலாயினர். ஜூரிகள் தனி அறைக்குள் சென் றனர். கைதி கமலகாந்தன் உண்மையே ஜெயமாகுமென்றெண்ணிக் கொண்டிருந்தான். ஜனங்களெல்லாம் தீர்ப்பை எதிர்நோக்கிய வண்ணமிருந்தனர்.

சுமார் அரைமணி நேரத்தில் ஜூரிகள் வெளிவந்தனர். பிரதம நீதிபதி மற்றவர்களை நோக்கி, 'உங்கள் முடிவென்ன?' என்று கேட்டார்.

'கமலகாந்தன் குற்ற.........' என்று கூறும்பொழுது, மிஸ். சரோஜினி பெருமூச்சுடன் அங்குவந்து 'சற்றுப் பொறுங்கள் என்றாள்.

'தீர்ப்பு சொல்லும்பொழுது நடுவில் நிறுத்த சட்டம் இடந் தாரது' என்றார் எட்வின் துரை.

'தகுந்த சாக்ஷி வரும்பொழுது வழக்கு எந்த நிலையிலிருந்தாலும் அதனை நிறுத்தி சாக்ஷியை விசாரிப்பது நீதிதான்' என்றார் பாலாஜி ராவ்.

பிரதம நீதிபதி ஆழ்ந்து யோஜித்தார். அத்தருணத்தில் மிஸ். சரோஜினி ஒரு கடிதத்தை நியாயாதிபதியிடம் சேர்ப்பிக்கச் செய் தாள். அதனைப் பார்த்த அவர், மற்ற ஜூரிகளையும் எட்வின் துரையையும் நோக்கி, இக்கடிதத்தில் 'என்னையும் சாக்ஷியாக விசா ரித்தால் எல்லாம் நன்மையாக முடியும்' என்று எழுதியிருக்கிறது. 'ஆதலால் சரோஜினியையும் சாக்ஷியாக விசாரிக்க விரும்புகிறேன். ஆனால் இன்று நேரம் அதிகமாகிவிட்டது. எனவே நாளை விசாரிப் போம்' என்று கூறி அவ்விடம் விட்டெழுந்தார். அனைவரும் அங்கிருந்தகன்றனர்.

அத்தியாயம் 29.

தந்தையும் சம்மதித்தார்!

திங்கட்கிழமை இரவு சுமார் எட்டுமணியிருக்கும். சோமநாத முதலியாரும் அவர் மனைவி குணபூஷணியம்மாளும் மேல்மாடியில்

தங்கள் தவப்புதல்வி கமலகாந்தாவின் பிரிவைப்பற்றி துக்கித்தவண்ணம் துன்பக்கடலில் தத்தளித்தனர்.

'நாதா! முன்பு நான் கூறியபடி கமலகாந்தனுக்கே அவளை மணம் செய்திருந்தால் இவ்வாறு நாம் கஷ்டப்பட வேண்டியதிராதன்றோ' என்றாள்.

'விதியை நம்மால் வெல்லக்கூடுமோ? அன்றியும் அவன் தாய் விபசாரி என்று பலராலும் தூற்றப்பட்டாள். நிற்க அவன் பரம ஏழை. இவற்றை எல்லாம் யோசித்துத்தான் மறுத்தேன். ஆனால் இப்பொழுது கிளியை வளர்த்து பூனைக்கிரையாக்கியது போலாயிற்று நம்கதை. நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து இயமனுக்கு இரைகொடுத்தோம். அந்தோ! பொல்லாதவிதி! அதன் வலிமை மிகக்கொடிது! அதை சகிப்பது மிகக்கடிது!' என்று பெருமூச்செறிந்தார்.

'நாதா! வேண்டாம்! விட்டுவிடுங்கள்! ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ? இதென்ன, தாங்கள் அறியா இரகசியமோ? இனிவருந்திப் பயனென்ன?' என்று தேறுதல் கூறினாள்.

அதுபோழ்து, அவர்கள் வீட்டுவாயலில் ஒரு மோட்டார்வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து மிஸ். சரோஜினி உள் நுழைந்தாள். இவளைக் கண்டதும் முதலியார் தம்பதிகள் வரவுகூறி ஆசனங் கொடுத்தமரச் செய்தனர்.

முதலியார் சரோஜினியை நோக்கி, 'அந்தக் கொடிய கொலைகாரன் நாளை நிச்சயம் தண்டிக்கப்படுவானோ? அல்லது விடுதலை பெறுவானோ?' எனக் கேட்டார்.

சரோஜினி:—அவன் குற்றம் செய்திருப்பானென்று தாங்களும் எண்ணுகின்றீர்களா?

முதலியார்:—அதிலென்ன சந்தேகம். என் அருமை மகளை கொஞ்சமும் நெஞ்சிரக்கமற்று கொலை செய்தானே! அதனை எண்ணுந்தோறும் என்னெஞ்சம் பதறுகிறது! அவனை என்முன் நிறுத்தினால் சித்திரவதை செய்வேன்! அத்தண்டனைகூட அவனுக்குப் போதா' என்றார்

சரோஜினி:—வீணில் அவனை ஏன் நிந்திக்கின்றீர்கள்? அவன் குற்றவாளியல்ல. நாளைத்தினம் அவனின் மாசற்றதன்மை வெளியாகும்.

முதலியார்:—அப்பாதகன் வெளிவந்து விடுவானோ?

சரோஜினி:—அப்படித்தான் நினைக்கிறேன்.

முதலியார்:—குற்றம்செய்த ஒருவன் விடுதலையடைவதென்றால் இதனினும் கொடுமைதான் வேறுண்டோ?

சரோஜினி:—அதெல்லாம் கிடக்கட்டும், கமலகாந்தாவை யாருக்கு மணம் செய்துகொடுக்கப் போகின்றீர்கள்?

முதலியார்:—சரோஜினி! உன் வார்த்தைகள் ஈட்டிபோல் என் இதயத்தில் பாய்கின்றன. சோதனை வேண்டாம்.

சரோஜினி:—ஐயா! சஞ்சலப் படாதீர்கள். அவளை யாருக்கு மணம் செய்துகொடுப்பீர்கள்?

முதலியார்:—அவள் உயிருடன் இருக்கின்றாளா?

சரோஜினி:—இருந்தால்?

முதலியார்:—நீ யாருக்கு மணம்செய்து கொடுக்கக் கூறினும் அவ்வாறே செய்வேன். அவளை இப்பிறப்பில் காண்பேனோ?

சரோஜினி:—அவளை கமலகாந்தனுக்கு மணம்செய்து கொடுப்பீர்களா?

முதலியார்:—மாண்டவள் மீண்டாள் எவ்வாறேனும் செய்யலாம்.

'நன்று. நான் இப்பொழுது அவசரமாகச் செல்லவேண்டும். நாளை நியாயஸ்தலத்திற்கு தாங்கள் அவசியம் வாருங்கள். எல்லாம் நன்மையாகவே முடியும்' என்றுகூறி எழுந்து சென்றாள்.

முதலியார் தனது மனைவியை நோக்கி, 'சரோஜினி என்னென்னவோ கூறினாளே! ஒருவேளை நம் கமலகாந்தா உயிருடன் இருப்பாளோ?' என்றார்.

'நாதா! அது சாத்தியமோ? மாண்டவர் மீண்டதாக இதுவரை எங்கேனும் கேள்விபுற்றதுண்டோ? அவள் தந்திரசாலி. ஏதேனும் புலன்றிய வந்திருப்பாள்' என்றாள்.

மணி பத்தாக, அவர்கள் இச்சம்பாஷணையை நிறுத்தி இராக் கடனாற்றச் சென்றனர்.

(தொடரும்)

மசால்வடைக் கிழவி

[எஸ். ஜெயராமன்]

மாணிக்கவேல் முதலியார் தன் சாய்மான நாற்காலியின்மீது அமர்ந்து இருக்கும் தருணம், எங்கிருந்தோ ஒரு துண்டுக் காகிதம் பறந்துவந்து இவர்மீது விழுந்தது. அதை வெகு ஆவலுடன் பிரித்துப் பார்க்க அதில் பின்வருமாறு எழுதி இருந்தது.

'மானேஜருக்கு,

இன்னும் ஒரு வாரத்திற்குள் உங்களுடைய பாங்கியில் ஒரு தம்பிடிகூட விடாமல் களவாடப்படப் போகிறது!

'குமரப்பன்'

இதைப் படித்த மானேஜர் திடுக்கிட்டு டெலிபோனண்டைபோய் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராகவாச்சாரியிடம் பேசலானார்.

மானேஜர்:—'சீக்கிரம் மோட்டார் காரில் வாருங்கள். உங்களுக்கு ஒரு கேஸ் வந்திருக்கிறது'

இன்ஸ்பெக்டர் 'சரி' என்று பதில் அளித்தார். சுமார் ஐந்து நிமிடங்கட்கெல்லாம் அந்த பாங்கியின் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இன்ஸ்பெக்டரும் நான்கு ஜவான்களும் வெளி வந்தனர். அவர்களுள் மூவரை வெளியில் நிற்கச் செய்துவிட்டு, ஒருவனை மாத்திரம் தன்னுடன் அழைத்துக்கொண்டு இன்ஸ்பெக்டர் உட்சென்றார்.

மானேஜர் ஆகிய முதலியார் ஓடிவந்து இன்ஸ்பெக்டரை உபசரித்து எதிரிலிருந்த நாற்காலியில் உட்காரச்செய்து பேசலானார்.

மானேஜர்:—இந்தாருங்கள் இந்தக் கடிதத்தைப் படியுங்கள்.

இன்ஸ்பெக்டர் அதைப் படித்துவிட்டு வியப்பு அடைந்தவராய் 'குமரப்பன் யாராய் இருக்கலாம்?' என்று யோசனை செய்யலானார்.

'ஓ, நம் பாங்கியில் சேவகனாக இருக்கும் குமரப்பன்தானே இவன்; ஏது, கையெழுத்து அவனுடையது மாதிரி இருக்கிறதே!' என்று மானேஜர் கூறினார்.

'அவனைக் கொஞ்சம் கூப்பிடுங்கள்' என்றார் இன்ஸ்பெக்டர். உடனே சேவகன் குமரப்பன் அங்கு வந்து நின்றான்.

இன்ஸ்பெக்டர் 'டேய், நீ ரொம்ப திருடி விடுவையோ? எப்படி திருடு வாய், அதை கொஞ்சம் சொல்லு பார்ப்போம்' என்று ஏற இறங்க அவனைப் பார்த்தார்.

குமரப்பன் நடுநடுங்கியவனாய் 'இல்லிங்க எசமானே, நேத்திராவுலே ரெண்டுபேரு வந்து என்னெதிரக்கே டுப்பாக்கி காமிச்சாங்க. நான் பயந்து கிண்ணு அவனை எங்கிட்ட இருக்கிற டுப்பாக்கியாலே சுடப்போனேங்க, அப்பொ, அப்போ அதுலே குண்டு இல்லிங்க...............'

அதற்குள்:—இன்ஸ்பெக்டர் 'என்டா, எவனாவது குண்டு இல்லாத துப்பாக்கியை வைத்துக்கொண்டு காவல் காப்பானா? அதிருக்கட்டும், அதற்கு மேலே என்ன நடந்தது?'

குமரப்பன்:—'அதுக்கப்பரம் எங்கிட்ட 1000 ரூ. நோட்டு ஒண்ணு காம்பிச்சாங்க. நான் அதெல்லாம் மூடியாதுன்னு என்னோடே கத்தியாலே குத்தப்போனேன். அவங்க எப்படியோ தப்பிச்சுக்குண்ணு போயிட்டாங்க'

'ஹி ஹி ஹி அச்சா குள்ள நரி' என்று இன்ஸ்பெக்டர் சிரித்தார். அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. உடனே இன்ஸ்பெக்டர் குமரப்பனை கைதியாக்கி ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விட்டார். அன்றிரவு சுமார் 2 மணி இருக்கலாம்.

இரண்டு கரிய உருவங்கள் பாங்கியை அடைந்து அங்குக் காத்துக் கொண்டிருந்த ஜவான்கள்மீது பாய்ந்து கைகால்களைக் கட்டி வாயில் சத்தம் செய்யாதவாறு துணியை அடைத்துச் சென்றன. பின்பு பூட்டைத் திறந்து கொண்டு கஜானா அறையினுள் சென்று ஒரு தம்பிடிகூட விடாமல் கட்டி தயாராக வெளியில் போகப் பார்த்தன. அப்போது மின்சார விளக்கு பளிச் சென்று எரிந்தது. உடனே பாங்கியின் மானேஜர் 'அப்படியே நில், இல்லா விட்டால் சுட்டுவிடுவேன்' என்று ரிவால்வரைக் காண்பித்தார்.

ஒரு உருவம்:—காலியான துப்பாக்கியை வைத்துக்கொண்டு நம்மை பயமுறுத்துகிறார். பேஷ்!' என்று கூறியவண்ணம் எதிர்பாரா விதமாக மானேஜர் மீது பாய்ந்து அவருடைய நெஞ்சில் தனது கூரிய கத்தியைப் பாய்ச்சிற்று. மறுநிமிஷம் மானேஜர் நிலத்தில் சாய்ந்தார்.

அடுத்தநாள் காலையில் 7 மணிக்கு அவருடைய காரியஸ்தர் மானேஜ ரின் நிலைமையைக்கண்டு டெலிபோன் மூலமாக டாக்டர் சோமசுந்தரத்தை யும், இன்ஸ்பெக்டர் ராகவாச்சாரியையும், துப்பறியும் நிபுணர் குமாரசாமியை யும் வரவழைத்து, விஷயத்தை விளக்கினார். டாக்டர் பிரேத பரிசீலனை செய்து கொலை இரவு சுமார் 2 மணிக்கு பீச்சாங் கத்தியால் செய்யப்பட் டிருக்கவேண்டும் என்று சொன்னார். குமாரசாமியும் இன்ஸ்பெக்டரும் கொஞ்சநேரம் அங்கே இருந்துவிட்டுக் கடைசியில் முகவாட்டத்துடன் சென்றனர்.

அன்றுமாலை 5 மணிக்கு ஒரு குறுகலான சந்தில் 'மசால்வடை முறுக்கு' என்று விற்றுக் கொண்டு ஒரு கிழவிசென்றான். வழியில் நீண்ட தாடி உள்ள ஒரு சாயபு அவளை பின்தொடர்ந்து, 'ஏ பாட்டி, எனக்கு அரையணுவுக்கு அந்தவடை தா' என்று அவன் கையில் ஒரு அணுவைக் கொடுக்க, அவள் கூடையை கீழ் இறக்கி வைத்து அவனுக்குவடைகளை எடுத்து

கொடுத்துவிட்டு 'சில்லரை இல்லையே; வழியில் சில்லரை அகப்பட்டால் கொடுக்கிறேன்; என்னுடன் வாருங்கள்' என்றுகூறி கிழவி நடக்கலானாள். 5 நிமிஷ நேரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று ஆச்சரியத்தால் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கொஞ்சத்தூரம் சென்றவுடன் ஒரு மார்வாடி சாயபுவைப் பார்த்து, 'என் கடனை எப்பொழுது கொடுக்கப் போகிறாய்.' என்று வினவினான்.

'என் கூடவா. நான் இன்னும் சிலநிமிடங்களில் தருகிறேன்' என்று சாயபு பதில் அளிக்க மார்வாடி அவர்கள் பின்சென்றான். இடையில் மற்றொரு துலுக்கன் ஏதோ வாங்கித்தின்று சில்லரைக்காக கிழவியைத் தொடர்ந்து சென்றான். கடைசியில் சுமார் 6 மணிக்கு அவர்கள் நால்வரும் ஒரு ஓட்டு வீட்டை அடைந்து உட்சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டனர். அன்றிரவு 2 மணிக்கு ஒரே இருட்டில் நான்கு உருவங்கள் அந்த ஊர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகாமையில் உள்ள ஒரு தனவந்தர் வீட்டிற்கெதிரேவந்து நின்று கொண்டிருந்தன. அப்போது அவைகளுள் ஒன்று 'நான் இப்போது என் வாயால் ஒரு சப்தம் செய்யப்போகிறேன். என் தோழர்கள் இப்போது வருவார்கள். உடனே நம் காரியம் சுலபத்தில் நிறைவேறி விடும்' என்றது. அதை மற்றவை ஆமோதித்ததுபோல் தோற்றியதால், உடனே அது தன் வாயால் சீட்டி அடித்தது.

அதே சமயம் சுமார் ஏழெட்டுப்பேர் எங்கிருந்தோ ஓடிவந்து ஒவ்வொருவனையும் இரண்டிரண்டு பேராகப் பிடித்துக் கொண்டனர். அப்போது புதிதாக வந்தவர்களுள் ஒருவன் 'பேட்ரியை' கொளுத்தினதில் கிழவி, மார்வாடி முதலியோர் போலீஸ் ஜெவான்களிடம் சிக்கி இருப்பதை அறிகிறோம்.

ஜெவான்கள் நால்வரையும் உருட்டி விழித்துப் பார்த்து, 'இந்த இருட்டில் இங்கே நின்றுகொண்டு என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். அவர்கள் விழித்ததால் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச்சென்று சிறையில் அடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தனர்.

ஆனால் நீண்ட தாடியுள்ள துலுக்கன் தன்னைப் பிடித்துக்கொண்டிருந்த ஜெவான்களில் ஒருவனிடம் ஏதோ ரகசியமாகச் சொன்னான். அந்த ஜெவான் ஆச்சரியத்தை தோற்றுவித்த முகத்துடன் சிறிதுநேரம் பேசாது நின்றுவிட்டு பிறகு மற்றவர்களைப் பார்த்து கிழவியையும் மற்ற துலுக்கனையும் சிறையில் அடைக்கும்படி ஏவினான். நீண்ட தாடியுள்ள துலுக்கன் தனது தாடியை உருவி விட்டுக்கொள்ள அது கையோடு வந்துவிட்டது. துலுக்கன் தனது முகத்தை சுளித்துக்கொண்டு மீசையை முறுக்கினான். என்ன ஆச்சரியம்; அங்கு துப்பறியும் நிபுணர் குமாரசாமி நின்றார்! அடுத்த நிமிஷம் மார்வாடியின் தலைப்பாகை தட்டிவிடப்பட்டது. அவருடைய தொப்பையில் பலமான குத்துவிடவே அங்கிருந்து ஏராளமான துணிகள் விழுந்தன. அது யார்? இன்ஸ்பெக்டர் ராகாவாச்சாரி! அந்தோ! கிழவியின் பாடு திண்டாட்டம் ஆய்விட்டது. அவளுடைய புடவையை (அவள் கூச்சலை பொருட் படுத்தாது) எல்லோரும் இழுக்க ஆரம்பித்தனர். புடவையை பறிகொடுத்து வெண்மையான தலைமயிர் கீழேவிழ அங்கு ஜம்புலிங்கம் நின்றான்! குமாரசாமி ஜம்புலிங்கத்தைப் பார்த்து, 'என் கூட்டாளிகள் வந்து விட்டார்களல்லவா? நாம் இனிமேல் தோழர்கள் தான்; கிழவி, திருடலாமே? வருகிறாயா? சில்லரை அரையணா எங்கே?' என்று வேடிக்கையாக மொழிந்தார்.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை எட்டணா தான்.

தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

விஜயராம் அல்லது போலிச் சாமியார்

[M. S. ஜெய்லானி]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

11-வது அத்தியாயம்.

'இறந்தவள் மீண்டும் பிழைத்தனையோ!'

காலை சுமார் 10-மணிக்கு நியாய ஸ்தலத்தில் அதிக ஜனங்கள் குப்புகூடி யிருந்தார்கள். எல்லோரும் நியாயாதிபதி ஜெயராமன்மேல் எத்தகைய தீர்மானம் வாசிக்கப் போகின்றார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மணியும் 10-30 ஆகிவிட்டது. நியாயாதிபதியும் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்தார். அன்று விசாரணைக்குப் போட்டிருந்த எல்லா கேசுகளையும் அடுத்த வாரம் விசாரணைக்கு தள்ளிப்போட்டுவிட்டு ஜெயராமனின் கேசை எடுத்துக் கொண்டார். குற்றவாளியான ஜெயராமனைக் காவலுடன் சிறையிலிருந்து கொண்டுவந்து கைதிக் கூண்டில் நிறுத்தினார்கள்.

நியாயாதிபதி:—'சாக்ஷிகளை எல்லாம் விசாரித்தாகிவிட்டது. நீ இன்னும் ஏதேனும் கூறவேண்டியிருந்தால் சொல்.'

ஜெயராமன்:—'ஸார், நான் முன்பே யெல்லா விஷயங்களையும் கூறிவிட்டேன். ஆகலான் தற்பொழுது ஒன்றும் நான் கூறவேண்டுவதில்லை. தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கின்றேன்'

நியாயாதிபதி தான் முன்பே எழுதிக்கொண்டு வந்திருந்த தீர்ப்பை வாசிக்க ஆரம்பித்தார். ஜனங்கள் எல்லோரும் ஒருவருடன் ஒருவர் உரையாடாமல் தீர்ப்பை ஊன்றி கவனித்து வந்தார்கள். ஆகையால் நியாயஸ்தலம் முழுவதும் நிசப்தமாயிருந்தது. கீழே கண்டவாறு நியாயாதிபதி தீர்ப்பை வாசித்தார்.

'3-ம் சாக்ஷியும், கொலை செய்யப்பட்ட விஜயாளின் சகோதரனுமான நாகரத்தினத்தின் சாக்ஷியத்திலிருந்து ஜெயராமனும் விஜயாளும் அதிக நேசத்துடன் காதலித்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் ஒருநாள் தனிமையில் பூங்காவில் தங்கள் காதலுக்கு அறிகுறியாக முத்தமாரி பெய்துகொண்டிருக்கும் காலத்து, நாகரத்

தினம் அங்கு பிரவேசித்து, ஜெயராமனைக் கடுஞ்சொற்களால் ஏசிய வண்ணம், தன் அறைக்கு அன்றுமுதல் அவன் வரக்கூடாது என்று உத்தரவிட்டான். ஜெயராமனும் அன்றுமுதல் விஜயாளின் இல்லத்திற்குச் செல்வதை மறந்தான். ஆகையால் காதலர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்க சந்தர்ப்பம் வாய்க்காமல் மனவருத்தத்துடன் இருந்தார்கள். நாகரத்தினம் தினம் தன் தங்கைக்கு எடுத்துக் கூறிய நல்லுபதேசங்களால், விஜயாள் ஜெயராமன் மேல் கொண்ட காதலுக்கு நாளடைவில் குறைவேற்பட்டது. அநேகமாக விஜயாள் ஜெயராமனை நினைப்பதில்லை என்றே கூறலாம். அவ்வாறு இருக்கும் பொழுது, ஜெயராமனால் எழுதப்பட்ட கடிதத்தை விஜயாள் பார்த்ததும் அக்கடிதத்தில் கண்டபடி விஜயாள் ஜெயராமனைச் சந்திக்க விரும்பவில்லை. இருந்தாலும் பல நாட்களாகக் காதலித்த ஒருவன் வந்து பார்க்கும்படி கூறும்பொழுது அவன் எதற்கு அழைத்தான் என்பதை அறிய ஆவல்கொண்டு, அவள் பார்க்கிற்குச் செல்வதாகக் கூறாமல் தன் தாயாரிடம் படக்காக்ஷி பார்க்கப் போவதாக உத்தரவு பெற்றுக்கொண்டு பார்க்கிற்குச் சென்றிருக்கிறாள். வண்டிக்காரன் சாக்ஷியத்திலிருந்து ஜெயராமன் 26ந் தேதி இங்கு வந்திருக்கின்றான் என்றும், படக்காக்ஷி முடிந்ததும் ஒரு பெண்ணுடன் சென்றான் என்றும் தெளிவாக விளங்குகின்றது. பார்க்கின் வேலையாள் முனிசாமியின் சாக்ஷியத்திலிருந்து ஜெயராமன் விஜயாளுடன் பார்க்கிற்கு வந்ததாகத் தெரிகின்றது. பார்க்கிற்கு வந்த விஜயாளுடன் ஜெயராமன் படக்காக்ஷிசாலைக்குச் சென்று, படக்காக்ஷி முடிந்ததும் விஜயாளை வீட்டில் கொண்டுபோய் விடுவதாகக் கூறி அருகிலுள்ள வாடகைக் காரில் அவளை ஏற்றிக்கொண்டு தான் தங்கியிருக்குமிடத்திற்கு கொண்டுபோயிருக்கின்றான். இதுவரை இவைகளை கவனியாத விஜயாள் தான் புது இடத்தில் தனிமையில் ஜெயராமனுடனிருப்பதை யறிந்து சற்று பயப்பட்டு, தன் இல்லத்திற்குக் கொண்டுபோய் விடும்படி வேண்டியிருக்கின்றாள். ஜெயராமன் அது தான் சமயமென்று விஜயாளிடத்தில் தான் அவளைக் காதலிப்பதையும் அவள் தன்னைக் காதலித்து வந்ததையும் கூறி முன்போல் தன்னைக் காதலித்து தன்னையே மணக்கும்படி வேண்டியிருக்கின்றான். அன்று பூங்காவில் ஏற்பட்ட இடையூற்றையும், சகோதரியின் நல்லுபதேசங்களையும் நினைத்து, ஜெயராமனின் வேண்டுகோளுக்கு மறுத்திருக்கிறாள். இவன் எவ்வளவோ முறை வேண்டியும் அவள் இடங்கொடுக்கவில்லை. இங்கு தொந்திரவு செய்தால் தனக்கு ஆபத்து நேரிடும் என அறிந்து முன்பே தயாரித்த விஷம் கலந்த திண்பண்டங்களை எடுத்துக்கொண்டு, விஜயாளை அவள் வீட்டில் கொண்டுபோய் விடுவதாகச் சொல்லி வாடகை வண்டியில் ஏற்றிக்கொண்டு இப்ராஹீம் பார்க்கிற்குச் சென்றான். அங்கும் அவளைப் பன்முறை வேண்டியிருக்கிறான். ஆனால் விஜயாள் அப்

பொழுதும் மறுத்திருக்கிறாள். பலாத்காரமாகத் தன் மோதிரத்தைக் கழற்றி, அவள் விரலில் அணிந்து, அவள் மோதிரத்தை ஜெயராமன் எடுத்துக்கொண்டான். சப்இன்ஸ்பெக்டர் கூறியபடி விஜயாள் மோதிரத்தை அடையப் பலவித முயற்சிகள் செய்து பார்த்திருக்கின்றாள். ஒன்றும் முடியவில்லை. ஜெயராமன் விஜயாளிடம் 'நீ என்னைக் காதலிக்காவிடினும் சரியே. நாம் இதற்கு முன்பு காதலித்த தற் கறிகுறியாக நான் சென்னையிலிருந்து வாங்கி வந்திருக்கும் தின்பண்டங்களை அன்புடன் நாமிருவரும் புசித்தால் அதுவே போதுமானது' என்று சொல்ல, விஜயாள் ஜெயராமனின் சூதை யறியாது அவனிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சாப்பிடுவ தாக வாக்குக் கொடுத்தாள். ஜெயராமன் விஷம்கலந்த தின்பண்டங் களை விஜயாளிடம் கொடுத்து, நல்லதைத்தான் வைத்துக்கொண் டான். இருவரும் சாப்பிட்டு இருக்கின்றார்கள். சாப்பிட்டு முடிந் ததும் விஜயாள் மயக்கம் வருகின்றதென்று கூறி யிருக்கின்றாள். அவளை அங்கேயே சிறிதுநேரம் சயனித்திருக்கும்படி சொல்லி யிருக் கின்றான். அவளும் மெய்மறந்து கண் அயர்ந்து கீழே சாய்ந்து தன் உயிர் துறந்தாள். இனி இங்கிருந்தால் ஆபத்து நேரிடும் என்று எண்ணி வெளியே செல்ல ஓடி யிருக்கின்றான். அதற்குள் விஜயாள் தான் எழுதிய கடிதத்தின்படித்தான் இன்றையதினம் இங்கு வந்திருக்கின்றாள். அவளைக்காணவிடில் அவளுடைய பெற்றோர்கள் கடிதத்தைக் கண்டு, தன்மேல் சந்தேகம் கொள்வார்கள். அதனால் இங்கு இறந்து கிடக்கும் விஜயாளின் உருவம் அடையாளம் தெரியா மல் செய்யவேண்டும் என்று தான் வைத்திருந்த அக்கினி திராவ கத்தை அவள் தலைமுதல் கால்வரையில் ஊற்றிவிட்டு வெளியே செல் லும் அவசரத்தில் தன் கைக்குட்டை கீழே விழுந்ததையும் கவனி யாமல் ஓடிவிட்டான். பிரேதத்தைப் பரிசோதனை செய்த டாக்டரும், விஷம் கலந்த உணவினால் இறந்திருக்கின்றாள். இறந்த பின்னர்தான் அக்கினி திராவகம் ஊற்றப்பட்டது என்பதிலிருந்து மேலே கூறிய விஷயங்கள் உண்மையென்று புலனாகின்றது. இறந்தவள் விஜயாள் என்பதற்கு அவளுடைய தகப்பனார் நகைகளைப் பரிசோதித்துப் பார்த்து, அவள் அணிந்திருந்த நகைகள், சேலை, இவைகள் எல்லாம் பிரேதத்தின்மேல் காணப்படுவதாலும், நகைகளின் பின்புறம் V. V. என்ற எழுத்துக்கள் இருப்பதாலும், சேலையிலும் பச்சைப்பட்டு நூலில் 'விஜயாள்' என்று தைத்திருப்பதாலும், பிரேதத்தினருகில் விஜயாளின் அறையின் சாவி கிடந்ததனாலும் இறந்தவள் விஜயாளாய்த்தானிருக்கவேண்டும் என்று கூறியிருக்கின்றார். இறந் தவள் உண்மையில் விஜயாளே. அவள் அன்று செல்லும்பொழுது அணிந்திருந்த சேலையும், நகைகளும், காணப்படுகின்றன. முகம் அடையாளம் தெரியாவிடினும் குற்றவாளி தன் குற்றத்தை மறைப் பதற்குச் செய்த சூழ்ச்சிக்கு இடம் கொடாமல் பார்ப்பின், இறந்தவள்

விஜயாள் என்றே நான் எண்ணுகின்றேன். ஏனெனில் அவளுக்கு விரோதி ஜெயராமனைத் தவிர வேறொருவரும் கிடையாது. கொலை செய்யப்பட்ட அன்றிரவு, ஜெயராமன் முகத்தை மூடிக்கொண்டு சென்ற ஒரு பெண்ணுடன் படக்காக்ஷிசாலையிலிருந்து வெளியேறி யிருக்கின்றான். ஆகையால் ஜெயராமனுடன் சென்ற பெண் விஜயாள் அல்லாமல் வேறல்ல. ஆகலான் அவளைக் கொலை செய்தது ஜெயராமன்தான் என விளங்குகிறது. அன்றியும் பார்க்கிற்கு வரும்படி எழுதிய கடிதமும் அவனுடைய கைப்படவே எழுதியதாக இருக்கின்றது. பிரேதத்தின் விரலில் 'J' என்ற எழுத்துள்ள மோதிரம் இருந்திருக்கிறது. கொலை செய்யப்பட்டு பிரேதம் கிடந்த இடத்தில் 'J' என்ற எழுத்துள்ள கைக்குட்டையும் கிடந்திருக்கிறது. ஆகையால் குற்றவாளி ஜெயராமன் என்றே தெளிவாக விளங்குகிறது. இக்குற்றத்திற்கு ஜெயராமனுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டியதுதான். ஆனாலும், ஜெயராமன்தான் விஷம் கலந்த தின்பண்டம் கொடுத்தான். அவன்தான் அவள்மீது அக்கினி திராவகம் ஊற்றினான் என்றும் நிச்சயமாக ஒரு சாக்ஷியின் வாக்குமூலத்தினின்றும் தெரியாமலிருப்பதாலும், அவன்தான் கொலை செய்திருப்பான் என்று எண்ணுவதற்கு ஏற்றவண்ணம் சாக்ஷிகள் வாக்குமூலம் கொடுத்திருப்பதாலும், நான் மரண தண்டனைக்குப் பதிலாக, ஜெயராமனுக்கு 7 வருடம் கடினகாவல் தண்டனை விதிக்கின்றேன்' என வாசித்து முடிக்கும் சமயம், சப்இன்ஸ்பெக்டர் மைதீன்பாக்ஷாவும், சாமியாரும், ஓர் வாலிப மங்கையும், கையில் விலங்குடன் ஓர் மகம்மதிய வாலிபனும் நியாயஸ்தலத்தினுள் நுழைந்தார்கள்.

அப்பொழுதுதான் நியாயாதிபதி 'நான் மரண தண்டனைக்குப் பதிலாக ஜெயராமனுக்கு 7 வருடம் கடினகாவல் தண்டனை விதிக்கின்றேன்' என வாசித்தார். உடனே சாமியார், 'ஜெயராமன் குற்றவாளியல்ல; உண்மைக் குற்றவாளியை இதோ கொண்டு வந்திருக்கின்றேன்' என மொழிந்தவண்ணம் உள்ளே பிரவேசித்தார்.

அங்கு வீற்றிருந்த விஸ்வநாத ஐயரும், நாகரத்தினமும் சாமியாருடன் வந்த இளமங்கை விஜயாள் என அறிந்து, 'இறந்தவள் மீண்டும் பிழைத்தனையோ!' எனக் கூறிக்கொண்டே விஜயாளை ஆலிங்கனம் செய்தவண்ணம் ஆனந்தத்தில் மூழ்கினார்கள்.

(தொடரும்)

பெண்:—பெண் எலுமிச்சம்பழம் மாதிரி இருப்பாள், சந்தேகமில்லை.

மாப்பிள்ளை:—அப்படியானால் புளிப்பாய் யிருப்பாளா.

—புதுவை எஸ். எ. சஞ்சீவி.

ஐ. ஸி. எஸ். ரெங்கன்

[வி. எஸ். எஸ். வாசன்]

ஐ. ஸி. எஸ். என்றதும் நீங்கள் இந்தியன் குக்கிங் சர்விஸ் என்று எண்ணிவிடாதீர்கள். இந்தியன் சிவில் சர்விஸ்தான். அதுதான் நம்ப பாட்டிமார்கள் சொல்வதுபோல் துப்பட்டி கலெக்டர் பரிக்ஷை முடித்து வேலைக்கு வந்தவர்களை சொல்வது. இப்பரிக்ஷையை முடித்து வந்தவன் நமது ரெங்கன். இவனது தந்தையார் காலஞ்சென்ற தேனாம்பேட்டை ராவ்பகதூர் அநந்தாச்சாரியார். அநந்தாசாரியார் என்றால் சென்னைமாநகரில் மூலைமுடுக்குகளிலுள்ள சர்வ பிரஜைகளுக்கும் தெரியும். இவன் பி. ஏ. என்ற இரண்டு எழுத்து பட்டம்பெற்ற அதிர்ஷ்டத்திலேயே தந்தையார் இறந்த துரதிர்ஷ்டமும் சேர்ந்தது.

கண்டதும் காதல் என்று நாவலாசிரியர் கவிஞர் மேடைப் பிரசங்கிகள் சொல்வதுபோல ராஜி என்ற பிராமண, அதுவும் அவன் குலமாகிய வைணவ, மாஜி சுமங்கிலியின் பேரில் அவன் கண்ணோட்டம் சென்றது.

ராஜியைப்பற்றி சிறிது தெரியவேண்டாமா? இவள் மாம்பலம் நரசிம்மாச்சாரியாரின் சீமந்த புத்திரி. இவளுக்கு ஏழு வயது. மழலைச் சொல்மாறு பருவம். அப்பொழுது இவள் தாயார் படுத்த படுக்கையாக இருந்தாள். தாய்க்கு இறப்பதற்கு முன் பெண்ணுக்கு கல்யாணம் செய்து பார்க்க வேண்டுமென்ற ஆசைதூண்ட, சைதாப்பேட்டையிலுள்ள கொழுத்த வக்கீல் சாரங்கபாணி ஐயங்காரின் புத்திரன் சுமார் 12 வயது கிருஷ்ணசாமி என்ற பாலகனுக்கு 25000 ரூ. சீர்வரிசைகள் செய்து கன்னிகாதானம் செய்துகொடுத்தனர். தாயும் நோயினின்று விடுபட்டாள். சுமார் 12 வருடங்கள் சென்றன. கன்னி கன்னிகையாயினாள். யாரிட்ட சாபமோ எவர் செய்த பாபமோ, கிருஷ்ணசாமி யமன் வாயில்பட்டான். மங்கை மஞ்சள் இழந்தாள். அன்றிருந்து பெற்றதாயின் வசைச்சொல் 'அடியே! தொடைகாலி 25000 ரூ. செலவழித்து கல்யாணம் செய்து வைத்தேனே. கொடுத்து வைத்தால்தானே. ஆம்படையானை வாயில் போட்டுக்கொண்டு செக்குலக்கை மாதிரி இருக்கிறாயே' என்ற இரைச்சல். இந்த இரைச்சலை கேட்டு நரசிம்மாச்சாரி அவ்விடம்

விஜயம்செய்து பெண்ணுக்கு ஆறுதல் சொல்லி மனைவிக்கு ஆசிர் வாதம் கொடுப்பார்.

நரசிம்மாச்சாரி பெரிய சீர்திருத்தவாதி. வருங்காலத்தை சிந்திப் பவர். தமிழ் நாட்டிலுள்ள போலிமதாச்சாரங்களை விரட்ட பாடு படுவர். வெகுநாள் சிந்தைசெய்து கடைசியாக தன் பெண்ணை சாரதா வித்தியாலயத்தில் சேர்த்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார்.

ராஜிக்கு ஓர் தம்பி உண்டு, கோபாலன் எனப் பெயரினன். இவன் அவளுக்கு ஓர் வயதுக்குத்தான் இளமை. இவன் ரங்கனின் பள்ளித்தோழன். இவர்கள் இருவரும் இணைபிரியா நண்பர்கள். ஆகவே கோபாலனும் ரங்கனும் ஒருவர் வீட்டிற்கு மற்றவர் அடிக்கடி போய்வருவது சகஜமல்லவா.

இப்படி இவர்கள் போய்வந்துகொண்டிருக்கும் நாட்களில் ஓர்நாள் அகஸ்மாத்தாய் கோபாலன் வீட்டின் வெளி வாரந்தாவில் நமது ராஜியை, ரங்கன் பார்க்கும்படி நேர்ந்தது. அவளுடைய



எழிலுருவம் ரங்கனை தேன்குடித்த நரிபோலாக்கியது. அப்படியே சித்திரப் பதுமைபோல் அசைவற்று நின்றான். ராஜியும் அவனை பார்த் தாள். பெண்களுக்கு இயற்கையாய் உண்டான நாணம்! மூடிக் கொள்ள வீட்டினுள் சென்றுவிட்டாள்.

ராஜி, இவ்வுலக வாழ்க்கை இன்னதென்றறியாத ராஜி. கையினுல் மாங்கல்யம் என்று உலகத்தோரால் சொல்லப்பட்ட நூல் கயிறை ஒருவன் தொட்டு முடிந்ததற்காக வீட்டிலேயே அடைபட்டு வெளிச்செல்வதின்றி அவளை ஒத்த இளைஞனும் யுவதியும் அளவளாவ அவளை மாத்திரம் கேவலம் சோறுதின்னும் யந்திரமாய் களிப்பென்பதின்றி நடைப்பிணமாய் வைத்த பிராமணை நோவதா அன்றேல் சாத்திரங்களை நோவதா அல்லது தாய் தந்தையர்களை நோவதா? அவளும் ஒரு மானிடப் பிறவிதானே! ரங்களைப் பார்த்த அன்றிரவு அவளும் துன்பப்பட்டாள்.

நாட்கள் சென்று, வாரங்கள் கடந்து, மாதங்கள் மறைந்தன. ஒருநாள் மாலை சுமார் 5-மணிக்கு கோபுவும் ரெங்கனும் சென்னை கடற்கரையில் கீழ்கண்டவாறு சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

ரங்கன்:—உன் வீட்டில் ஓர் பெண்மணி இருக்கின்றுளே, அவள் யார்?

கோபு:—அந்தக் கதையை ஏன் கேட்கிருய்? அவள்தான் எனக்கு ஒரே வயதுக்கு பெரியவளான என் சகோதரி ராஜி (மாங்கனியைக் கைக்கொடுத்து மாலையும் இட்டேன்) என்று கோவலன் சொன்னதுபோல உலகம் இன்னதென்று அறியாமுன்னே அவளுக்கு மாங்கல்யம் என்ற சடங்கை முடித்து, வெண்ணை திரண்டு வரும்பொழுது தாழி உடைந்தது என்று சொல்வதுபோல அவள் பக்குவதிசை அடைந்ததும் அவள் கணவன் என்று உலகோரால் சொல்லப்பட்டவன் இறந்தான். அதற்காக அவள் வாழ்நாளை அமங்கலியாய் கழிக்கவேண்டுமாம். என்ன உலகமடா இது, ஓயாத ஏமாற்று, சிந்தித்துப் பார்த்தால் நம் நாட்டில் சரியான காதலுக்கு விளை பூமி இல்லை என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாகரிகம் தேசவளர்ச்சி சுயமரியாதை முதலியன முதிர்ந்த இக்காலிலும் கூட தினசரி வாழ்க்கையில் ஆண் பெண் தாராளமாய் கலந்து பழகக்கூடாது. என்ன சமாதானம் இவர்கள் சொன்னுலும், இது நாம் கண்கூடாகப் பார்ப்பவையல்லவா?

மேலும் பெண்களுக்கும் நமக்கும் எவ்வளவு வித்தியாசம் பார்? ஒரே குடும்பத்தில் நானும் என் தமக்கையும் பிறந்தோம். நான் சொந்தப் பிள்ளையும் அவள் வேற்றுமையும் ஆகிவிட்டாள். அவளது கணவன் என்ற சொல்லும் ஆவி தற்பொழுது இருப்பதாக வைத்துக் கொள். அப்பொழுது அவள் எங்கள் வீட்டைவிட்டு என்னையும் என் மாதா பிதாக்களையும் மறந்து அப்புதிய குடும்பத்திற்கு எவ்வளவு புனிதமாக செல்வாள் என்று யோசி. அவள் எதை நம்பிப் போகிருள், யாரை நம்பிப் போகிருள்? அவ்வளவு தைரியமும் சந்தோஷமும் எதன்பொருட்டு? அப்பேர்பட்ட உன்னதமான சிரேஷ்டமான

வஸ்து திடீரென்று போய்விட்டால் தன் நினைவின்றி குழந்தைப் பருவத்தில் நடந்த போலித் திருமணத்திற்காக வாழ்நாள் பூராவும் அவள் கஷ்டப்பட வேண்டுமோ' என்று கூறிமுடித்தான்.

ரெங்கன்:—ஏது கோபு! பெரியமேடைப் பிரசங்கி மாதிரி பேசி விட்டாயே. நம் நாட்டைவிட்டு பாலியவிதவைகளின் கண்ணீரை அகற்றவேண்டும். நாம் அதற்கு பாடுபடவேண்டும். வீரேசலிங்கம் பந்துலு, சுப்ரமணிய ஐயர் முதலிய பெரியோர்கள் சொல்லி வந்தாலும் நாம் காரியத்தில் செய்து காட்டவேண்டும். இதற்கு முதலில் நான் தயார். உன் தமக்கை ராஜியை மணம் ஒப்பி நீ எனக்கு கல்யாணம் செய்துகொடுப்பாயா? எனது தாயாரைப்பற்றி எனக்கு கவலையில்லை.

கோபு:—என் தமக்கை ராஜியின் மனநிலைமையை அறிந்து சொல்கிறேன்' என்று வீட்டிற்கு வந்துவிட்டான்.

அன்று பௌர்ணமி பூர்ணசந்திரன் களங்கமின்றி ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தான். நரசிம்மாச்சாரியின் மொட்டை மாடியில் இருவர் பேசும் குரல்கேட்கிறது. அவர்கள்தான் சகோதர சகோதரியான ரங்கனும் ராஜியும்.

'அக்கா! ஏன் இவ்வாறு நினைத்து தினந்தோறும் இளைத்துப் போகிறாய்'

ராஜி:—தம்பி, என்ன இளைப்பு ஒன்றுமில்லை.

கோபு:—பொய் சொல்லுகிறாயா!

ராஜி:—நிஜமாகத்தான். இருந்தாலும் என் வாழ்க்கையை நினைத்தால் அழுகையைத் தவிர வேறு என்ன இருக்கிறது?

கோ:—ஏன், உலகவாழ்க்கையை காலத்துக்கு தகுந்தாற்போல் மாற்றினால்?

ரா:—நாட்டில் உள்ளோர் ஏசமாட்டார்களா.

கோ:—நாட்டில் உள்ளோருக்கு பயந்து நாம் வாழ்க்கையை கெடுத்துக் கொள்வதா?

ரா:—சாஸ்திர சம்மதம் வேண்டாமா.

கோ:—'பண்டோர் ராவணனும் சீதை தனைப்பாகத்தால் கொண்டோர் வனத்திடையே வைத்துபின் கூட்டமுற மந்திரிகள் சாத்திரிமார் தக்கது செய்தீர். தர்மத்திற்கு இச்செய்கையை ஒக்கும் என்று கூறி உகந்தனராம் சாத்திரிமார். பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று நீ படித்ததில்லையா?

ரா:— சரி, உன் ஆதரவும் அன்பும் இருக்குமேல் நீ எவ்வாறு செய்யச் சொல்கிறாயோ அவ்வாறு நான் செய்ய சித்தமாக இருக்கிறேன்' என்றாள். அதே நேரத்தில் தேனாம்பேட்டை ஆநந்த விலாஸ் மேல்மாடியில் இரண்டு பேச்சுக் குரல்கள் ஒலித்தன.

'அம்மா! என்னைப்பெற்று வளர்த்த தாயே! உன் பெண் தன் பாலியத்தில் அதுவும் தன் நினைவு தெரியாத காலையில் போலி மதாச்சாரங்களுக்கு உட்பட்டு கல்யாணம் என்ற சடங்கை பேரளவிலே செய்து முடித்தால், அதற்காக அவள் வாழ்நாள் முழுவதும் துன்பப் படுவதா?'

'போடா பாங்கிப் பயலே, கட்டேல போறவனே, அக்கரைக்கு போனவன்தானே. எந்த பரச்சியை கட்டிண்டு அலைந்தயோ' யார் கண்டா? சாஸ்திரங்களை பேச வந்துட்டே. எக்கேடுங்கெட்டு எருக்கு முளைச்சுப்போ' என்ற பதில் வந்ததிலிருந்து ரெங்கனும் அவன் தாயாரும் என்று நான் சொல்லாமலே உங்களுக்கு விளங்கும்.

பலப்பல சொல்லுவானேன். கோபுவின் முயற்சியால் ராஜிக்கும் ரெங்கனுக்கும் காதல் மணம் நடைபெற்றது. ராஜி தேசவெறி பிடித்தவள். நம்நாட்டு முப்பத்தி முக்கோடிமக்களில் முப்பது கோடி மக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி அல்லலுறும் காட்சி அவள் அகக்கண்ணில் தோன்றி தோன்றி மறையும்தோறும் நம் நாட்டைவிட்டு என்று இவ்வறுமைப்பிணி நீங்கும் என்று ஏங்குவாள். ஏழைச் சகோதரர்களை, நம் தாய்நாட்டில் பிறந்தவர்களை, நம் இந்து சமூகத்தில் இருப்பவர்களை, வயிற்றுப் பிழைப்புக்காக போலி மதாச்சாரத்தினால் ஒரு சிலகூட்டத்தார் அடிமைப் படுத்தல் கேவலம் என்பதை எண்ணி நைந்து உருகுவாள். அன்றாடம் வயிற்றுப் பிழைப்புக்காக உடல்வியர்க்க வேலைசெய்து 4 அணா காசு வாங்கிவந்து அதில் இரண்டு அணாவைகள் அரக்கனுக்கு பலி கொடுத்துவிட்டு பாக்கி இரண்டணாவையும் போதையில் எங்கேயோ துலைத்துவிட்டு வீட்டில் மனைவி மக்களை துன்பப்படுத்த, அதனால் அல்லலுறும் ஏழைச் சகோதரிகளைப் பார்த்து நைந்துருகுவாள்.

மேலே கண்டவைகளுக்கு முற்றும் மாறான எண்ணத்தையுடையவன் ரெங்கன். அப்பேர்ப்பட்டவனை தன் சாமர்த்தியத்தினால் அவனது செயல்களைமாற்றி ஐ. ஸி. எஸ். பட்டத்தையும் துறக்கச் செய்து தேசத்தொண்டனாக்கினாள். 'ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவு ஓங்கி வையந் தழைக்குமாம்' என்ற நீதிக்கிணங்க ரெங்கனும் ராஜியும் தேசத்தொண்டு செய்து வருவதாகக் கேள்வி.

கமலாட்சி அல்லது
காரிகையின் களங்கமற்ற காதல்

[மயிலை எஸ். ஐ. நாதன்]

(சென்றமாதத் தொடர்ச்சி)

அன்று மறுநாள் காலை பெண்டிக்கோ நகரில், கற்பகவல்லி யின் மாளிகையில் யாவரும் காலை ஆகாரமுண்ட பின் உட்கூடத்தில் கனகவல்லியும் கற்பகவல்லியும் கமலாட்சியும் உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தார்கள்.

கனகவல்லி:—கற்பகம், நமது சோமநாதனுக்கும் வயதாகி விட்டது. அவனுக்கும் ஓர் கலியாணத்தைசெய்து முடித்துவிட வேண்டும்.

கற்பகவல்லி:—ஆம்! அம்மா! சும்மா இருந்தால் எப்போதுதான் காரியம் முடியும். மற்றவர்களைப்போல் சோமநாதன் எனக்கு கலி யாணம் செய்துவை என்று சொல்லக்கூடியவன் அல்ல. தம்பியின் கலியாணத்தையும், நமது கமலாட்சிக்கு முடித்தவுடனே செய்து வைத்துவிட்டால் நமக்கும் கொஞ்சம் சுலபமாயிருக்கும்.

கனகவல்லி:—அப்படியானல் வெளியில் சென்று பெண்பார்க்க வேண்டிய கஷ்டமில்லை. லோகநாயகியை அவனுக்கு முடித்து விட லாம் என்பது என்பிரியம். உன்யோசனை என்ன?

கற்பகவல்லி:—என்ன யோசனை ஒன்றுமில்லை, ஆனல் தாய் மாமனுயிற்றே என்று தான் பார்க்கவேண்டி யிருக்கிறது.

கனகவல்லி:—என்ன கற்பகம்! எல்லாம் அவரவர்கள் விதிப்படி நடக்குமே தவிர இவ்வித சம்பந்தங்களினுல் உண்டாவதல்ல. எத் தனையோ குடும்பங்கள் இவ்விதம் தாய்மாமனைக் கலியாணம் செய்து கொண்டு ஏகபோகமாக வாழவில்லையா? சில குடும்பங்கள் இவ்வித உறவில்லாமல் திருமணம் செய்துகொண்டு அநேக துக்கங்களுக்கும், துன்பங்களுக்கும், கஷ்டங்களுக்கு மாளாகவில்லையா? ஆகவே ஒவ்வொரு குடும்பமும் சிலசமயங்களில் துன்பத்தையும், சிலசமயங் களில் சந்தோஷத்தையும் அநுபவிக்க வேண்டியதே தவிர கஷ்டியோ, சுகமோ அனுபவிப்பதற்கு இல்லை. எல்லாம் பகவான்

கிருபையன்றி நம்மால் ஒன்றும் நடக்கப் போவதில்லை. இன்னார்க்கு இன்னபடி என்று அவன் விதித்தப்படி அவரவர்கள் சுக துக்கத்தை யடைய வேண்டும். ஆகவே உறவைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய தில்லை.

கமலாட்சி:—அம்மா! அவைகள் எல்லாம் இருக்கட்டும். குடும்பத்தை நடத்துபவர்களாகிய புருஷனும் மனைவியும் ஒருமணப்பட்டு ஒற்றுமையாக, சந்தோஷமாக வாழ்ந்தால் அதுவே போதும்.

கற்பகவல்லி:—அம்மா! தங்கள் பிரியப்போல் நமது சோமநாதனுக்கு லோகநாயகியை கலியாணம் செய்துவைத்து விடலாம். இக்கலியாணத்தை எப்போது எவ்விடத்தில் வைத்துக் கொள்ளலாம்?

கனகவல்லி:—ஏன், கமலாட்சியின் கலியாணம் முடிந்த மறுநாள் அதே மாளிகையில் இவர்களது கலியாணத்தையும் நடத்திவிடலாம். நமக்கு சுலபமாக இருக்கும்.

கமலாட்சி:—ஆம் அம்மா! அப்படியே செய்துவிடலாம். இதற்கு வேண்டியவைகளை கவனிக்கும்படி சொல்லிவிடவும்.

என்று இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் சமயம் கடிகாரத்தில் மணி 10 அடித்தது. அப்போது தபால்காரன் அன்றைய தினசரி பத்திரிகையை கற்பகவல்லியிடம் கொண்டுவந்து கொடுத்தான். அவ்விடத்திலே அவள் அத்தினசரியை பிரித்துப் பார்க்கையில் முதல் பக்கத்தில் பெரிய எழுத்தில் பின்வருமாறு அச்சிடப்பட்டிருந்தது.

புதிய உத்தியோகங்கள்

பூங்காவனம் சுந்தரநாதர் லாமெம்பர்:

பெண்டிக்கோ போலீஸ் துளசிங்தாஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல்

பெண்டிக்கோ 15வ:—பூங்காவனம் தலைவர் சுந்தரநாதருடைய உண்மையான தேச நலத்தையும், சேவகத்தையும் கண்ட தீர்த்த மன்னர்பிரான் அவரை பெண்டிக்கோ கவர்ண்மெட்டில் லா மெம்பராக நியமிக்கப்பட்டுள்ள விஷயத்தையும்; பெண்டிக்கோ போலீஸ் கமிஷனரான துளசிங்தாஸ் கொள்ளைக் கூட்டத்தாரின் விஷயமாக எடுத்துக்கொண்ட உழைப்பாலும், மேற்சொன்ன இவ்விருவர்களுடைய தீரா உழைப்பினாலும் ஒரு கொள்ளைக்கூட்டத்தார் அடி

யோடு நாசமாகி அவற்றினால் குடிஜனங்களுக்கு சௌகரியமும் நலமும் உண்டாகியபடியாலும் துளசிங்தாஸை பெண்டிக்கோ கவர்ன்மெண்டின் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ள விஷயத்தையும் அறிந்து மிகவும் சந்தோஷமடைந்தோம்.

திரு. சுந்தரநாதரும், துளசிங்தாஸும் இம்மாதக் கடைசியில் தங்கள் உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று தெரிகிறது'

இவ்விஷயங்களை படித்த கற்பகவல்லியும், கனகவல்லியும் வெகு சந்தோஷமடைந்தார்கள். ஆனால் இதுவிஷயமாக நமது கமலாட்சி அடைந்த அகக்களிப்பும் ஆனந்தமும் சொல்லத்தரமன்று. அவள் வாய்விட்டு ஒன்றும் அவ்விடத்தில் சொல்லாவிட்டாலும் பகவானை சிந்தித்து அவரை வழிப்பட்டாள். இச்செய்தி அவ்வூர் முழுவதும் காற்றுத் தீப்போல் பாவிகிட்டது. போலீஸ் கமிஷனரைப் பார்ப்பதற்காக போவோரும் வருவோருமாக ஊரார் இருந்தார்கள். இவ்வுத்தியோகங்களைப்பற்றி பொதுஜனங்கள் வெகு சந்தோஷமடைந்தார்கள்.

விவாகதினத்திற்கு இரண்டு நாட்களுக்குமுன், சுந்தரநாதர் பார்ப்போர் மனதைக் கவரும்படியாக தன்னை வெகு அழகாக அலங்கரித்துக்கொண்டு, மாலை 4 மணிக்கு பெண்டிக்கோ நகரை நாடிச் சென்றார். உலாவி வருவதினால் தேக ஆரோக்கியமெனக் கருதி அவர் அப்போது கால்நடையாக நடந்து நமது கற்பகவல்லியின் பூந்தோட்டத்தில் நுழைந்து ஆங்குள்ள நாலாவித பூக்களின் இயற்கையழகை நோக்கிக்கொண்டே மெல்லநடந்து சென்றார். அச்சமயம் கமலாட்சி உயர்ந்த சேலையுடுத்திக்கொண்டும் நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டிட்டுக் கொண்டும், தலைவாரி ஜடைபின்னி இருவாச்சி சூடிக்கொண்டும் வழக்கம்போல் பூந்தோட்டத்தை நாடி அங்குள்ள அழகிய பசுமையான புற்றரையில் உட்கார்ந்துகொண்டு வீணையைக் கையிலேந்தி சுருதிமீட்டி குயிலினைப் பழிக்கச் செய்யும் தன் இனிய குரலால் மெய்மறந்து சில கீர்த்தனைகளை பாடிக்கொண்டிருந்தாள். அவ்வழியாக சென்றுகொண்டிருந்த சுந்தரநாதர் இவ்வழகிய குரலோசையைக் கேட்டு அவ்விடத்திலே நின்று அப்பக்கமாக தன் முழுமனதையும் செலுத்தினார். இவ்வித சங்கீத ஞானமும் அழகும் வாய்ந்த அவ்வனிதை ஒருக்கால் நமது மனதை கொள்ளைகொண்ட கமலாட்சியாக இருக்குமா அல்லது ஒருவேளை அவளது சகோதரியான லோகநாயகியாக இருக்குமா என திகைத்து அவ்விடத்திலே ஆனந்த சாகரத்தில் மூழ்கிக்கிடந்தார். வெகு நேரம்வரையில் அதைக் கேட்டிருந்த பின்னர் அது யாரென அறிய அப்பக்கமாக சிறிது தூரம் சென்று பார்க்கையில், கமலாட்சியாக இருக்கக் கண்டு ஆனந்தத்தினால் ஒன்றும் செய்யமுடியாதவாய் அசைவற்று நின்றுவிட்

டார். அப்போது கமலாட்சியும் அன்று தன் காதலன் அடையப் பெற்ற உயர்தர உத்தியோகத்தின் ஆவலினால் மூழ்கிக் கிடந்தாளாத லால் அவர் வந்தது அவளுக்கு அச்சமயம் தெரியவில்லை. அப்போது சுந்தரநாதர் அவளழகைக் கண்டு ஆனந்தமடைந்தாரே யாயினும், தான் அவளருகில் செல்லலாமா வேண்டாமாவென, மதுவுண்ட தேனீப்போல் திகைத்து நின்றார். இவ்வாறு சுமார் பத்து நிமிடங்கள் சென்றதும், கமலாட்சி, மாலை வெயிலினால் சுந்தரநாதருடைய அழகிய நிழல் தன் எதிரே தோன்றுவதைக் கண்டுவிட்டாள். மேலும் அவர் தன்மேல் பூசியிருந்த ரோஸ் அத்தரின் பரிமளவாசனையும் அவளது நாசிக்கெட்டிற்று. உடனே அவள் திரும்பிப் பார்க்க அவ் விடத்தில் சுந்தரநாதர் அழகே உருவெடுத்தாற்போல் நின்றதைக் கண்டு அளவுகடந்த பரவசத்தால் மெய்மறந்து 'காதலா' என அலறி விழும் சமயம், சரேலென்று சுந்தரநாதர் ஓடிச்சென்று அப்பொற் கொடியாளை தன் கரத்தால் ஏந்தி அவ்வழகிய ஆசனத்தில் உட்கார்ந் தார். வெகு சீக்கிரத்தில் தன் உணர்வடைந்து தான் தன் அன்பன் மடியில் படுத்திருப்பதைக் கண்டு இயற்கையாக பெண்களுக்குள்ள நாணத்தால் நாணி சரேலென்று எழுந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, வெட்கத்தால் பேசமுடியாமல் அவரையே உற்றுநோக் கினாள். கமலாட்சியின் முகத்தில் சந்தோஷமும் நாணமும் மாறி மாறித் தோன்றுவதைக் கண்ட சுந்தரநாதர் அளவற்ற மனமகிழ்ச்சி யடைந்து அப்பெண்மணியைப் பார்த்து, 'கமலம்! வீணாக உனக்கு கஷ்டத்தை கொடுத்ததற்காக என்னை நீ மன்னிக்கவேண்டும். நான் கால்நடையாக உன் மாளிகையை நாடிவரும்போது, உன் சங்கீத ஞானம் என்னை இவ்விடமிழுக்க, அதனால் நீ சுகமாக உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்ததை நான் வீணே கெடுத்து விட்டேன்' என்று கூறினார்.

கமலாட்சி:—(மிகவும் சந்தோஷமடைந்து) காதலா! அப்படி யொன்றும் சொல்லவேண்டாம். நான் தங்களை மீண்டும் சந்தித்தத னால் எனக்கு உண்டான ஆனந்தத்துக் களவில்லை.

சுந்தரநாதர்:—அப்படியானால் மிகவும் சந்தோஷம்தான். வீட்டில் யாவரும் சௌக்கியம்தானே?

கமலாட்சி:—(புன்சிரிப்பும், நாணமும் தவழ்ந்த இனிய முகத் துடன் அவரைப் பார்த்து) காதலா! தங்களுக்குக் கிடைத்திருக்கும் உன்னதமான புதிய உத்தியோகத்தைக் கேள்விப்பட்டதிலிருந்து நான் மிகவும் ஆனந்தமடைந்தேன். மேலும் தற்போது தங்கள் தாயார் மூலமாக அடைந்த சொத்து சுதந்தரங்களுக்கு கணக்கில்லை. இந்நிலையில் என்னை தாங்கள் எவ்விதமாக நேசிக்கின்றீர்களோ?

சுந்தரநாதர்:—(முதலில் திடுக்கிட்டு பின்னர் புன்னகை கொண்டு) காதலி! இந்நிலைமையல்ல, வேறு இதற்குமேல் உயர்ந்த பதவியையும், சொத்தையும் அடைந்தாலும் உன்னையன்றி எப்பெண் மணியையும் மணந்து கொள்ளமாட்டேன். இது சத்தியம். மேலும் நான் யாரோ, நீ யாரோ வென்று இருந்து வந்ததற்குமாறாக இப்போது நீ எனது மாமன் மகளாய்விட்டாய். ஆகவே இது விஷயத்தில் நீ கிஞ்சித்தும் கவலைப்படவேண்டாம் (என்று கூறி அவளைத் தழுவிக்கொண்டார்.)

இவற்றை செவியேற்ற கமலாட்சி, கொம்புத்தேனுக்கு ஆசைப் பட்ட முடவனுக்கு அது அவனுக்குக் கிட்டிவிட்டால் அவன் மனம் எவ்வாறு மகிழுமோ அதைக் காட்டிலும் பன்மடங்கு பரவசமடைந் தாள். பின்னர் இருவருமாக வெகு ஆனந்தத்தோடு மாளிகையை நாடிச் சென்றார்கள்.

சுந்தரநாதர் வருகையை யறிந்த கற்பகவல்லி அவருக்கு வேண்டிய சகல உபசாரங்களும் குறைவில்லாமல் நடந்தேற ஏற்பாடு செய்தாள். அவ்வூர் ஜனங்கள் அவருக்கு கிடைத்த உயர்ந்த பதவிக்காக அவரை கண்டு அவருக்கு மரியாதைகள் பல நடத்தினர். அன்று பிற்பகல் துளசிந்தால் அவ்விடம்வர இருவருமாக வெகுநேரம் குதூகலத் தோடு பேசிக்கொண்டிருந்தனர். பின்னர் சந்தோஷத்தோடு அவர் பிரிந்து சென்றார். சத்தியத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவோர்க்கு முதலில் அவர்கள் பகவானது அருளைப்பெற்று இப்பூமியிலேயே ஓர் குறையுமின்றி மேன்மையான பதவியை யடைகிறார்கள் என் பதை இதனால் அறிகிறோமல்லவா?

சுந்தரநாதர் தன் உத்தியோகத்தினிமித்தம் பெண்டிக்கோ நகரிலே 'மங்கள விலாசம்' என்னும் ஓர் அழகிய மாளிகையை விலைக்கு வாங்கிக்கொண்டு அதிலே கலியாணத்தையும் முடித்து விடுவதென்று முடிவு செய்துகொண்டு பணக்காரர்முதல் ஏழைகள் ஈறாக யாவருக்கும் முகூர்த்தப் பத்திரிகைகளும், அழைப்பு கடிதங் களும் அனுப்பினர். மங்கள விலாசம் சுமார் கால்மைல் விஸ்திரண முள்ளது. அதைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் அழகிய மதில்சுவர் கட்டப்பட்டிருந்தது. மங்கள விலாசம் என்னும் அம்மாளிகை மூன்று அடுக்குகள் அடங்கிய ஓர்உன்னதமாககட்டிடம். அம்மங்கள விலாசத்துக்கு இரண்டு வாசற்கதவுகளும் அதைச்சுற்றி நான்கு புறங் களிலும் நான்கு அழகிய ரஸ்தாக்களும் இருந்தன. அம்மாளிகையின் அழகிய நந்தவனத்தில் மல்லிகை, இருவாச்சி, முல்லை, ரோஜா முதலிய நறுமணங்கமழும் பூஞ்செடிகளும்; அதன் அருகில் மா, பலா, மாதுளை, நார்த்தை, ஆரஞ்சு முதலிய நாவுக்கினிய கனி விருக்ஷங்களும் நின்றன. நான்கு பக்கங்களில் நீர் ஊற்றுகள்

அமைக்கப்பட்டு அதன் ஒவ்வொன்றின் நடுவிலும் ஓர் பக்ஷி இறகுகளை விரித்திருப்பதுபோல் அமைக்கப்பட்டு, அதன்வழியாக ஜலம் நாலா பக்கங்களிலும் மழைத் துளிகள்போல் விழுந்துகொண்டிருந்தன. அதன்நடுவில் அன்னப்பக்ஷிகள் முழுகி விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு சிறிய தடாகம் இருந்தது. கண்களைக் கவரக்கூடிய நாலாவித குரோட்டன் செடிகள் வரிசையாகவும், அவைகளின் இடை இடையே உட்காருவதற்காக சித்திர வேலைப்பாடுகள் அமைந்த ஆசனங்களும், அவைகளைச் சுற்றிலும் பச்சைக் கம்பளம் விரித்தாற்போல் பசுமை யான புற்றரையும் இருந்தன. இவ்வழகிய மங்கள விலாசத்தில் கலியாணமென்றால் அவற்றின் சிறப்பைப்பற்றி நாம் என்ன எழுதுவது.

அம்மாளிகையின் தெரு வாசலை அடைத்து பூப்பந்தல், பச்சை, ஊதா, நீலம், சிவப்பு, மஞ்சள் முதலிய பல வருணமுள்ள சரிகைக் கரை துணிகளாலும், தாள்களினாலும் செய்யப்பட்ட போலித் தாமரை, ரோஜா முதலிய நானாவித புஷ்பங்களாலும் வெகு அலங் காரமாக போடப்பட்டிருந்தது அப்பந்தற்கால்களில் வரிசை வரிசை யாக அடர்ந்து பெருத்த குலைகளைத் தாங்கிய வாழை மரங்களும், அவ்வாழைக் குலைகளோடு சேர்ந்தாப்போல் தேங்காய் குலைகளும், பாக்குக் குலைகளும், தேர்ச்சீலைகளும், தோரணங்களும் வெகு விநோதமாக கட்டப்பெற்றிருந்தன. அப்பந்தல் முழுமையும் அழகிய பலவர்ண மின்சார விளக்குகளும், பட்டு திரை சீலைகளும் போடப் பட்டிருந்தன. அம்மாளிகையை சுற்றிலுமுள்ள நந்தவனங்களிலும் கனி விருக்ஷங்களிலும், நீர்நிலை மண்டபங்களிலும் பசுமையான புற்றலைகளிலும் முழுமையும் நான்கு பெரிய ஹால்களாக சித்திர வேலைப்பாடுகளுடன் பந்தல் போடப்பட்டு அவற்றின் இடை இடையே மிகவும் பிரகாசிக்கக் கூடிய மின்சார விளக்குகளும் அழகிய பல வருண குளோப்புகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. தளவரிசையில் இரத்தன ஜமக்காளங்கள் விரிக்கப்பட்டு அதன்பேரில் பஞ்சுமெத்தை தைத்தசோபாக்களும், சாய்மான நாற்காலிகளும், மூலைக்குமூலை நிலைக்கண்ணாடிகளும் அமைக்கப்பட்டிருந்தன. மாளிகையினுள் எல்லாவிடங்களிலும் மணப்பந்தல் மிக உன்னத மாக கண்ணைக் கவரக்கூடிய அதியற்புத வேலைப்பாடுகள் அமைந்த சிங்காரிப்புகளுடன் மிக அழகாக விளங்கிற்று.

மறுநாள் அதாவது சுக்கிரவாரம் உதய காலத்தில் ஒரு பக்கம் மங்கள வாத்தியங்கள் முழங்க விப்பார்கள் வேதமோத அங்கு கூடி யிருந்த ஏராளமான ஆடவர், பெண்டிர்கள் நறுமணங்கமழும் நாலாவித பூக்கள் சொரிய, சுந்தரநாதர் குதூகலத்துடன் லோக மாதேபோல் மிக அலங்காரமாக உடுத்தப்பட்ட, இனிமையும் எழிலும் வாய்ந்த கமலாட்சிக்கு மங்களநாண் பூட்டினர். பிறகு

நடக்க வேண்டிய காரியங்கள் யாவும் ஒழுங்காக நடந்தபின், விருந்தினர்களை தக்கபடி உபசாணை செய்து யாவருக்கும் தக்க மரியாதைகள் செய்யப்பட்டன.

மறுநாள் அவ்வழகிய அம்மாளிகையில் அதே சிறப்புடன் சோமநாதன் வெகு குதூகலத்தோடு, தன்னருகில் மணமகளைப் போன்று நன்ருய் அலங்கரித்துக்கொண்டிருந்த லோகநாயகிக்கு வெகு சிறப்புடன் மங்களநாண் பூட்டினுன். இக்கலியாணத்துக்கு சுந்தரநாதரும் கமலாட்சியும் வெகு சிறப்போடு பல காரியங்கள் செய்வித்து அவர்களை கௌரவப்படுத்தினர்கள். இக்கலியாணங்களுக்கு வந்திருந்த விருந்தினர்கள் ஐந்துநாள் வரைக்கும் தங்கியிருந்து சென்றனர்கள்.

ஒரு வாரத்திற்கு பின்னர் சுந்தரநாதரும் கமலாட்சியும், அவர்களது வேலையாளாகிய முருகப்பனும் கனகசுந்தரமும் தங்களோடு பல கஷ்டங்கள் அனுபவித்து உண்மையாக சேவகம் செய்து வந்ததினுல் அவர்கள்மேல் சந்தோஷமடைந்து அவர்களுக்கு கலியாணம்செய்து வைப்பதென்று முடிவுசெய்து ஓர் நல்ல முகூர்த்த தினத்தில் சுந்தரநாதர் தன் கிராமமாகிய பூங்காவனத்தில் தன் மாளிகையில் அவ்விருவருக்கும் வெகு சிறப்பாக கலியாணத்தை செய்வித்து அவர்களுக்கு வேண்டிய சொத்தும் கொடுத்து அக்கிராமத்திலே வாழ்ந்து வரும்படியாக செய்துவிட்டார்.

சோமநாதனும் லோகநாயகியும் அவர்கள் மாளிகையில் வசித்து வந்தனர். சிலநாட்களுக்கு பின்னர் சுந்தரநாதர் முயற்சியால் சோமநாதனுக்கு ஓர் உயர்ந்த வேலை கிடைத்துவிட்டது.

சுந்தரநாதர் தன் புதிய உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு வெகு செல்வாக்காக திறமையுடனும் சாமர்த்தியத்துடனும் காரியம் செய்து வருகிறுர்.

முற்றிற்று.

(சீனு தன் நண்பன் வைத்தியனை விருந்திற்கு பதார்த்தம் வாங்க கடைக்கு அனுப்பினுன். 1 மணி நேரம் கழித்து சும்மா வருவதை கண்டு.)

சீனு:—கோபு என் வெறுங்கையாக வருகிறுய்?

கோபு:—பார்த்தேன் வாவழக்காய் வாய்வு, முருங்கக்காய் பித்த வாயு, கத்தரிக்காய் சூடு, வெண்டக்காய் குளிர்ச்சி, ஆகலால் ஒன்றும் வாங்கவில்லை.

—புதுவை எஸ். எ. சஞ்சீவி.

'பம்பாய் மாப்பிள்ளை'

—:o:—

[கா. தி. ஸ்ரீ. அய்யனேரி]

இரவு மணி சுமார் பத்து இருக்கும். திருமங்கை நகர் அக்கிரஹாரம். ஒரு வீட்டின் கூடத்தில் பெட்ரூம் லைட் மினுக்மினுக்கென்று எரிந்து கொண்டிருக்கிறது. மீனாமட்டும் அங்கு தூங்கிக் கொண்டிருக்கிறாள். சமையலறையில் இருவர் பேசும் சப்தம் கேட்கிறது. 'தினம் ஆபீசில் வேலை இருக்கத்தான் செய்யும், பதினைந்து வயசானகுமரை வீட்டில் வைத்துண்டு, இப்படிப் பேசாமலிருந்தா. காலா காலத்தில் யாருக்கேனும் ஒப்படைச்சு அனுப்பத்திருக்காமே' என்று ஆர்ப்பரித்தாள் ராஜாம்பாள்.

'சத்தம் போடாதே, எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறேன், அவசரப்பட்டா என்ன செய்வது' என்று இலையின்முன் உட்கார்ந்து கொண்டே தம் மகளுக்கு பதிலளித்து சற்று சிந்தனையிலாழ்ந்தார் வெங்கிடாஜலமையர்.

'இலையின் முன் தூங்கி விழுந்துண்டு, காலா காலத்திலேயும் திங்கவர்றதில்லே' என ஒரு அதட்டல் போட்டாள் ராஜி.

கோபிக்காதே, என்ன செய்யலாம்' என்று கூறி அவசர அவசரமாய் இரண்டுவாய் அள்ளிப் போட்டுக்கொண்டு வந்து ஒரு பத்திரிகையை எடுத்துவந்து அடியில் கண்டபடி வாசித்து காட்டினார்.

மணமகன் தேவை

குழந்தை மீனாவுக்கு காசிப கோத்திரமன்னியில் ஸ்மார்த்த பிராம்மண குலத்தில் நவீன நடையுடை பாவனையில் இருபதுமுதல் இருபத்தைந்து வயதுள்ள வாலிபன் தேவை. விபரங்களை நேரில் தெரிந்து கொள்ளவும். பணக்காரன் ஏழை என்ற நிபந்தனையில்லை.

வெங்கிடாஜலமையர்

தாலூகா கிளார்க், கல்லூராணிப் பண்ணையார்,

சேத்துப்பட்டி (Via) பாரையூர்; என்று முடித்தார்.

(பாரையூர் என்பதையே மாற்றி திருமங்கை நகர் என புனைப்பெய ராக்கப்பட்டது)

'சரி, சரி, இப்படி எழுதினு வந்துவிடப்போரானுக்கும். செவம் பிறந்தது நேரும் கூறுமாய்ப் பிறக்கப்பிடாதோ' என்றுள் ராஜி. ஐயர் பேசாமலிருக்க வேண்டி வாய்பொத்தி ஜாடை செய்துவிட்டு இரவு 12 மணியாகவே படுக்கச் சென்றார்.

வெங்கிடாஜலத்தைப்பற்றி இனத்தார் அனைவரும் நன்கு அறிவர். செல்வமாய் வாழ்ந்துவந்த ஜேஷ்ட புத்திரியான ராஜாம் பாள் பாலியத்திலேயே வாழாப் பெண்ணாய் வீடுவந்து சேர்ந்து விட்டதாலும், ஐயர்வாளின் மனைவி ஐந்து பெண்களைப்பெற்று ஆண் சந்ததியற்று காலம் சென்று விட்டதாலும், அவர் ராஜியின்பாலகப் பட்டு விழிக்கும்படி நேரிட்டது.

கல்லூரணிப் பண்ணையார் என்பதும் பெயாளவாகவே இருந்தது. நிலம் வெறும் சார்காடாகவே யிருந்தது. சர்க்கார் தீர்வைக்கும் பண்ணையாள் சுப்பனுக்கும்கூட தனது சர்க்கார் சம்பளம் போதாமல் கடன் வாங்கும்படி ஏற்பட்டது. பெண்களின் விவாகம் குடும்பத்தின் கஷ்டநஷ்டம் இவைகளாலும் சுமார் ரூபாய் ஏழாயிரத்துக்கு கடன் ஏறியது. பெண்களால் சீதனம் கிடைக்கு மென்றும், அதனால் பிழைக்கலாமென்றும் கருதி இவரிடம் சம்பந்தம் செய்துகொண்ட பேர்வழிகள் ஏமாந்துபோய் ஒதுங்கி வாழ்ந்தனர்.

ஐயர்வாளுக்கோ ஓய்ந்த பருவம். கடன் வேறு. பெண்ணோ அங்கஹீனம், காலோ சரியில்லை. ஆகவே அதைக் கட்டிக்கொள்ள ஒருவரும் இனத்தில் முன் வரவில்லை. விளம்பரம் செய்தாவது விவாகம் நடத்தி விடலாம் என்று கருதியே ஏற்பாடு செய்திருந்தார்.

விளம்பரமான பத்துநாட்களுக்கெல்லாம் ஐயரின் நண்பர் ஒருவர் பெயரால் பாம்பே போய் சம்பாத்தியம் செய்து வந்திருக்கும் கோபாலன் என்பவன் நாலைந்து தினங்களில் பெண்ணைப் பார்க்க வருவதாக கடிதம் வந்தது. வெங்கிடாஜலத்தின் சந்தோஷத்துக்கு அளவு கிடையாது! அவசரம் அவசரமாய் ஓடிவந்து ராஜியிடத்தில் செய்தியைத் தெரிவித்து வீட்டை ஓர் பிரபுவின் மாளிகையெனத் தெரியும்படி தாமே அலங்கரித்தார். இரவல் நகைகளை வாங்கி மீனுவுக்கு அலங்காரம் செய்து பார்த்து மெச்சிக்கொண்டார். வந்தவ ரிடத்தில் அதிகமாய் பேசாமல் நாஜூக்காய் முக்கிய விஷயங்களை மட்டும் பேசி தளுக்காய் நடந்துகொள்ள வேண்டுமென்றும் எச்ச ரிக்கை செய்தார். மீனுவிடம் அதிகமாய் அங்குமிங்கும் நடமாடக் கூடாதென்றும், அவசிய சந்தர்ப்பங்களில் சுவரை ஆதாவாய் வைத்து மெட்டாய் நடக்க வேண்டுமென்றும் யுக்தி கூறினர். எல்லோரும் மாப்பிள்ளையின் வரவை எதிர்பார்த்தவண்ணமா யிருந்தார்கள்.

நான்கு நாட்களாய், ஏன் ஒரு வாரமாய் ரயில்வே ஸ்டேஷனுக்கு போய் வந்துகொண்டிருந்தார் ஐயர். இப்படி அடிக்கடிபோய் வருவதைப் பார்த்த ஏனைய குமாஸ்தாக்கள் சிரஸ்தார், தாசில்தார் முதலியவர்கள் காரணம் விசாரித்தார்கள். அவர்களிடம் தன் குமாரத்தி மீனுவுக்கு வரப்போகும் பம்பாய் மாப்பிள்ளையைப்பற்றி பெருமையடித்துப் பேசிப்பேசி மகிழ்வார். அவர்களும் 'அப்படியா, போகட்டும்' என்று ஐயர்வாளின் அதிர்ஷ்டத்துக்கு அனுதாபப் பட்டவர்கள்போல் பேசிவிட்டுப் போவார்கள்.

குறிப்பிட்ட தவணைக்கு இரட்டிப்பு நாட்களாகியும் மாப்பிள்ளை வாரததால் ஐயர்வாளுக்கு பாதி உற்சாகம் போய்விட்டதெனினும், ஒருவேளை அவசரக் காரியங்களைப் பார்த்துவிட்டு ஏறக்குறைய வரலாமென்று எண்ணியிருந்தார். சிலதினங்கள் சென்றன. தாசில்தாரால் நெருக்கப்பட்ட அவசரக் கட்டுகளுக்கு (O. N.) ஆபீஸ் நோட்டு எழுதிக்கொண்டிருந்தார் வெங்கிடாஜலம். மனதில் கலவரம் அதிகம் குடிகொண்டிருந்ததால் பேப்பரைச் சரியாய்ப் படித்தும் படியாமலும் விஷயம் விளங்காமல் தோன்றியபடி எழுவதும், சரியாயில்லாததால் கிழித்தெறிவதுமாகிய ஜோலிகளை மும்முரமாய்ப் பார்த்துக்கொண்டு வந்தார். மீனு அதிர்ஷ்ட ஹீனமுள்ளவளென்றே சொல்லவேண்டும்.

என்? ராஜியும் கூட அச்சமயம் வீட்டுக்கு ஆகாதவளாய்ப் போகவே வீட்டுப் பொறுப்பும் மீனு தலையிலேயே விழுந்திருந்தது.

மாலை சுமார் 6½ மணிக்கு ஓர் இளைஞன் தலையில் கறுப்பு உல்லன் குல்லா, கோட், மேல் பட்டு அங்கவஸ்திரம், மூக்குக் கண்ணாடி, பூட்ஸ் இவைகள் அணிந்து கையில் ஒரு சூட்கேஸுடன் ஐயர் வீட்டை விசாரித்து உள்நுழைந்தான். மீனுவுக்கு வெட்கம்

ஒரு பக்கம், தூக்கம் ஒரு பக்கம். பின்கதவைத் திறந்துகொண்டு கீழும் மேலும் விழுந்தடித்து அவசா அவசரமாய் ஓடி அடுத்த வீடு சென்று 'அம்மாமி, அம்மாமி, அக்கா சொல்லிண்டாளோ இல்லையோ யாரோ பம்பாயிலிருந்து வரப்போவதாக அவா வந்திருக்கா, எனக்கு வெட்கமா யிருக்கு' என்றுள்.

'ஐயோ பாவம், என்ன செய்வாயம்மா, சின்னஞ் சிறுசுதானே இங்கேயே இரு' என்றுகூறி தலைவாரி ஜடைபின்னிவிட்டு கொல்லையிலிருந்த ராஜியினிடம் விஷயத்தைக் கூறினுள். அவளது வேண்டுகோளின்படி அவசர அவசரமாய் சமையல் செய்துவைத்தாள். வந்த வாலிபன் வீட்டின் கூடத்தில் தனியாய் கால்மணிநேரம் உட்கார்ந்திருந்து ஓடியாடி வேலை செய்துகொண்டிருந்த பெண்ணைப் பார்த்துவிட்டு ஆண்பிள்ளை இல்லாத இடத்தில் இருக்கலாகாதென வெளியேவந்து ஐயரின் வரவை எதிர்பார்த்திருந்தான். மணி எட்டாகியும் வாராததுகண்டு வெளியே சற்று உலாவிவரப் புறப்பட்டான். வெங்கிடாஜலம் சற்று நேரத்திற்கெல்லாம் வந்துவிடவே விஷயத்தை அறிந்து வந்தவரை தேடச்சென்றுர்.

எங்கும் காணுமல் வீட்டுக்குவரவே, அங்கு நின்றுகொண்டிருந்த புதியதோர் வாலிபனைக் கண்டு 'அதார்' என்றுர். 'என் சார், நான் தான்' என்ற பதில். 'தெரியவில்லையே, மீனு லைட்டைக் கொண்டுவா' (மீனு நாணிக்கோணி படியில்வைத்துப் போகிறுள்.) 'உங்கள் பெயர்?' 'கோபாலன்' என்றதைக் கேட்டதும் 'சரி, சரி தெரிந்து கொண்டேன்' (மனதில் பம்பாய் மாப்பிள்ளைதான் என தீர்மானித்துக் கொண்டார்) 'அம்மா, இலைபோடு' எனவே, இலை போடப்பட்டு இருவரும் சாப்பிட்டுவிட்டு கூடத்தில் வந்து அமர்ந்தனர்.

'நீங்கள் இரண்டு வருஷத்துக்கு முன் துறையூரில் வேலை பார்த்தபோது கஞ்சம் கிருஷ்ணய்யரிடத்தில் புரோநோட்டின் பேரில் பணம்வாங்கி யிருந்ததற்கு எத்தனையோ லட்டர்போட்டும் பதிலில்லாததால் நேரில் கேட்டு வரும்படி என்னை அனுப்பினுர். நான் அவருடைய மைத்துனன். பணத்தை வாங்கி வரும்படியும் இல்லாவிட்டால் வீண் மனஸ்தாபங்களுக்கு இடமுண்டாகுமெனவும் கூறியுள்ளார். நாளை காலையில் நான் ரயிலுக்கு போகவேண்டுமாதலால் இப்பொழுதே முடித்துக் கொண்டால் நல்லது' என்று கூறிக்கொண்டே பெட்டியைத் திறந்து நோட்டை எடுத்துக் காண்பித்தான் வாலிபன்.

ஐயருடைய முகம் வெளுத்தது. நாக்கு வறண்டது. இலவு காத்த கிளிபோலாயினர். எனினும் சமாளித்துக்கொண்டுதான் பல ஜோலிகளில் இருந்து விட்டபடியால் கவனிக்கவில்லையென்று சமாதானம்கூறி, அன்று வாங்கிவந்திருந்த சம்பளம் ரூ. 50-ம் கொடுத்து

வாவுவைத்து பாக்கியை சீக்கிரத்தில் தந்துவிடுவதாய் நல்ல வார்த்தை கூறி அனுப்பினர்.

மறநாள் 'மாப்பிள்ளை வாராததற்கு காரணம் என்ன என்று முன் லட்டர் வந்த நண்பருக்கு எழுதியிருந்ததற்கு, தனக்கு அது விஷயம் யாதொன்றும் தெரியாதென்றும், தன் பெயர்வைத்து யாராவது எழுதியிருக்கலாமென்றும் எழுதிய பதில் லட்டர் கிடைத்தது. கடைசியில் மீனுவின் கதி என்ன? கல்லூரணியில் பத்து ஏக்கர் நஞ்சையும் 400 ரூபாய் பெறுமான தன் மனைவியின் நகைகளில் சிலதும் கொடுத்து நல்ல வார்த்தை சொல்லி பிள்ளையில்லாத காரணத்தை உத்தேசித்து தனது இரண்டாம் குமாரத்தியான காமாக்ஷிக்கு சககளத்தியாக உரப்புலியூர் நாகராஜன் தலையில் வைத்துக் கட்டிவிட்டார். இனிமேலாயினும் ஐயர்பாடு விடிந்து விடாதா.!

பொய் சொல்லும் பேரன்

பேரன்:—தாத்தா! நேற்றையதினம் ஒரு பசுவைப்போல் பருமனை நாய் ஒன்றைப் பார்த்தேன்.

பாட்டனர்:—ஓ! அப்படியா? பசுவைப்போல் அவ்வளவு பெரிய நாயா?

பேரன்:—ஆமாம் தாத்தா.

பாட்டனர்:—அவ்வாறே இருக்கலாம். ஆனல் நான் சொல்வதைக்கேள். இன்னும் கொஞ்சநேரத்தில் நாம் ஒரு ஆற்றின் பாலத்தைக் கடக்கவேண்டியிருக்கிறது. அப்பாலத்தின் விசேஷம் என்னவென்றால் அப்பாலத்தின் வழியாய் ஒரு பொய்யன் சென்றால் அப்பாலம் தானகவே பிரிந்து பொய் சொன்னவனை ஆற்றில் விழும்படி செய்கிறது.

(சிறுவன் கொஞ்சதூரம் பேசாமல் நடந்தான். கடக்க வேண்டிய பாலத்தைக் கண்டான்.)

பேரன்:—தாத்தா! எனக்குத் தெரியாது. ஒருக்கால் அந்த நாய் ஒரு கன்றின் அவ்வளவு பெரிதாயிருக்கலாம். (இன்னும் கொஞ்சநேரத்தில் இருவரும் பாலத்தை நெருங்கினர்)

பேரன்:—தாத்தா! நான் சரியாய்க் கண்டுபிடிக்காமல் பேசிவிட்டேன். அந்த நாய் ஒரு பசுவைப்போல் அவ்வளவு பெரியதல்ல. ஆனல் அந்த நாய் பருமனில், மற்ற நாய்களைப்போலவே சிறியதாகவே இருந்தது.

—'இளைஞன்'

சிவகாமி அல்லது
தன் கற்பை காத்த காரிகை

[V. ஜேயராமன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மறுநாள் காலை ரங்கசாமி ஐயர் எழுந்து தன் வேலைகளையெல்லாம் மறந்து சிவகாமியென்னும் பேய் உருவத்திற்கும், பக்கிரிக்கும் தன்னுடைய சொத்துக்களை எழுதிவைத்துவிட்டு தன்னுடைய அக்கிரமச் செயல்களைப்பற்றி எழுதித்தருவோமா, வேண்டாமாவென்று யோசித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது கூரை மேலிருந்து 'ஐயா! ரங்கசாமி ஐயரே! என் யோசித்துக்கொண்டிருக்கிறீர்? அதையும் எழுதிவிடவும். நாங்கள் சரியாய் 1-மணிக்கு வருவோம்' என்ற குரல் கேட்டது. ரங்கசாமி ஐயருக்கு ஒன்றும் செய்ய தோன்றவில்லை. உடனே தன்னுடைய அக்கிரமச் செயல்களை எழுதி வைத்துவிட்டார்.

கோவிந்தன் சிவசமுத்திரத்திற்கு சென்று சிவகாமியை அழைத்துவந்து, தன் வீட்டில் வைத்திருந்தார். ரங்கசாமி ஐயரை சந்திக்க வேண்டியதற்கு முந்திய தினம் கோவிந்தன், சிவகாமியின் பெற்றோர்களுக்கு அவர்களின் பெண் சிவகாமி அவனிடம் இருப்பதாகவும், அவளை மறுதினம் ரங்கசாமி ஐயர் வீட்டில் சுமார் 1-மணிக்கு சந்திக்கும்படியும் தந்தி அனுப்பி யிருந்தார்.

ரங்கசாமி ஐயரை சந்திக்க வேண்டிய அன்று சுமார் 12-மணிக்கு கோவிந்தன் சிவகாமியின் பேய் உருவத்துடன் ஐயரை சந்தித்தார்.

உருவம்:—எல்லாம் தயாராக எழுதி வைத்திருக்கிறீரா?

ரங்க:—(மிகவும் வருத்தத்துடன்) எழுதி வைத்திருக்கிறேன். என்னுடைய ஆஸ்திகளையெல்லாம் உங்களுக்கு எழுதிக்கொடுத்து விட்டேனே, பின்னால் என் வாழ்நாளை கழிக்க எனக்கு எதாகிலும் பணம் வேண்டுமே. அதற்கென்ன செய்வது?

உருவம்:—ஐயரே! உம்மைப்போல் நாங்கள் அவ்வளவு கல்மனதுடையவர்கள் அல்ல. உமக்கு ரூ 5000 தருகிறோம். அதை பெற்றுக்கொண்டு சிவக்ஷேத்திரங்களுக்கு சென்று உம்முடைய வாழ்நாளை கழிக்கவும். எதோ நீர் எழுதிய பத்திரங்களை காண்பியும்.

ரங்க:—அதோ இருக்கிறதென்று' இரண்டு காகித உறைகளை காண்பித்தார். உருவம் அதைப் படித்து பார்த்துவிட்டு,

'சரி! அது அப்படியே இருக்கட்டும். நானும் பக்கிரியும் இன்னும் சில நிமிஷங்களில் வருகிறோம்' என்றுகூறி மறைந்துவிட்டது.

ரங்கசாமி ஐயருடைய மனம் ஓர் நிலையில் இல்லை. மௌனமாக இருந்தார். சரியாக 1 மணிக்கு கோவிந்தன் சிவகாமியை அழைத்துக்கொண்டு ரங்கசாமி ஐயர் வீட்டிற்கு சென்றார். சிவகாமியின் பெற்றோர்கள் கோவிந்தனை 1-மணிக்கு ஐயர் வீட்டில் சந்தித்தனர். கோவிந்தன் சிவகாமியையும், அவளது பெற்றோர்களையும் ஓர் அறையில் இருக்கச்செய்து, தான் மாத்திரம் ரங்கசாமி ஐயரின் முன் தோன்றினர்.

ரங்க:—சிவகாமியை இன்றையதினம் காண்பிப்பதாகக் கூறினீரே, அவள் எங்கே?

பக்கிரி:—அவள் என்னிடந்தான் இருக்கிறாள். நீர் எனக்கு தருவதாக கூறிய சரிபாதி சொத்து எங்கே?

ரங்க:—இரண்டு நாட்களுக்கு முன்பு இவ்விடம் ஓர் பைசாசின் உருவம் தோன்றிற்று. அது சிவகாமியினுடையதுபோல் இருந்தது. அது சரிபாதி ஆஸ்தி கேட்டது. அதனால் என் ஆஸ்திகள் முழுமையும் உமக்கும் அப்பேய் உருவாகிய சிவகாமிக்கும் எழுதி வைத்திருக்கிறேன்' என்றார்.

இவைகள் எல்லாவற்றையும் பக்கத்து அறையிலிருக்கும் சிவகாமியும் அவளது பெற்றோர்களும் கேட்டுக்கொண்டிருந்தனர்.

'ஐயரே! நான் உமக்கு கூறியபடி சிவகாமியை இப்பொழுது காண்பிக்கிறேன்' என்று சிவகாமியை அழைத்தார். முன் ஏற்பாடு செய்திருந்தபடி சிவகாமி மாத்திரம் ஐயர் முன் தோன்றினள். சிவகாமியை கண்டவுடன் ஐயருக்கு பயமும் திகிலும் உண்டாய்விட்டது.

சிவகாமிக்கு ஐயரை கண்டவுடன் அசாத்தியமான கோபம் உண்டாய்விட்டது. சிவகாமி தனக்கு பக்கபலம் இருப்பதால் தைரியம்கொண்டு, 'ஏ! காமப்பேயே! காமவெறிகொண்ட நாயே! உனக்கு வெட்கமில்லையா? உன்னுடைய அக்கிரமமான செயல்களுக்கும், உன் உயிருக்கும் அழிவுகாலம் ஏற்பட்டுவிட்டது. என்னை அபகரித்துக் கொண்டுவந்து என்னை கெடுக்க முயற்சித்தாய். அது கடவுளுக்குப் பொறுக்கவில்லை. 'காடுவாவா வீடு போபோ' என்று கூறும் உனக்கு காமப்பித்து ஒழியவில்லையே. உன்னைப் போன்ற கிழவர்களுக்கெல்லாம் சிற்றின்ப ஆசை ஒழியவில்லை என்றால் உலகம் எப்படி முன்னுக்குவரும்? உன்போன்றவர்களின் இச்செயல்களைக் கண்டு சிறு பிள்ளைகளும், ஒருவிதப் பயமுமின்றி, எல்லா அக்கிரமங்களும் செய்யத் தலைப்படுகிறார்கள். கேவலம் சிற்றினபத்தால் அல்லவோ, இப்பொழுது உன்னுடைய ஆஸ்தி முழுமையும் இழக்க நேரிட்டது. அதுவுமல்லாமல் உன்னுடைய கீர்த்தியும், புகழும் அடியோடு அழிய நேரிட்டது. ஏ! காமப்பித்து பிடித்த பிராமணரே! இனிமேலாகிலும் இவ்விதமாக சிறு பெண்களை கற்பழிக்க முயற்சிக்காதீர். என்னுடைய சிநேகிதரான துப்பறியும் கோவிந்தன் உம்மிடம் கூறியபடி உமக்கு ரூ 5000 கொடுக்கிறோம்' என்று கூறியவுடன் பக்கிரி தன் வேஷங்களை கலைத்து, துப்பறியும் கோவிந்தனாக நின்றான். 'நீர் அதைக்கொண்டு ஏதாகிலும் ஓர் திவ்விய க்ஷேத்திரத்திற்கு சென்று உம்முடைய பாபச்செயல்களை

யெல்லாம் போக்கும்படி கடவுளைப் பிரார்த்தித்து, நல்வழிப்படும். உம்முடைய வயதிற்கும் என்னுடைய வயதிற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ஒரு சிறு பெண் உமக்குப் புத்தி சொல்லவும், நீர் கேட்கவும் எதனால் வந்தது? எல்லாம் காமம் என்று சொல்லப்படும் சிற்றின்பத்தாற்றானே. நான் இதுவரையிலும் கூறிவந்தது உம்முடைய இருதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்குமென்று எண்ணுகிறேன். நீர்செய்த காரியங்களுக்காக நீர் வருத்தப்படுவதாக உம்முடைய முகத்தோற்றம் கூறுகிறது. அதனால் மேன்மேலும் உமக்கு புத்தி கூறி, ம்மை துன்புறுத்த எனக்கு இஷ்டமில்லை. அதனால் இந்த க்ஷணமே நீர்செய்த அக்கிரமமான செயல்களை மன்னிக்கும்படி கடவுளை பிரார்த்தியும்' என்று தன் ஆத்திரம் அடங்கும்வரையில் பேசிவிட்டு சோர்ந்து அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

ரங்கசாமி ஐயர் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, நமக்கிருந்த கீர்த்தியும் புகழும் அழிந்து, நம்முடைய சொத்தெல்லாம் பிறருக்கு கொடுத்து அவர்கள் பார்த்து நமக்கு ரூ. 5000 கொடுக்கும்படி நேரிட்டதும், ஓர் சிறு பெண் நமக்கு புத்திகூற ஏற்பட்டதும், எல்லாம் நம்முடைய அக்கிரமமான செயல்களால்தான்' என்று வருத்தப்பட்டுக்கொண்டார். இதற்குள் சிவகாமியின் பெற்றோர்களும் அங்கு வந்தனர். இவர்களை ஐயர் பார்த்தவுடன் வெட்கத்தால் தலை குனிந்தார். பிறகு சிவகாமியையும், கோவிந்தனையும் அருகில் அழைத்து அவர்கள் பேருக்கு எழுதி வைத்திருந்த இரண்டு கவர்களை எடுத்து கொடுத்துவிட்டு, மற்றொரு கடிதம் எடுத்து அதில் தன்னுடைய கம்பெனி வேலைக்காரர்களுகக்கு ஓர் கடிதம் எழுதி கையொப்பமிட்டுக் கொடுத்தார். அதில்,

சென்னை,

4—8—35.

இக்கடிதம் கொண்டுவரும் துப்பறியும் கோவிந்தனை உங்கள் எஜமானராக ஏற்றுக்கொண்டு, என்னிடம் எவ்வளவு அன்பாக இருந்தீர்களோ, அதைவிட பன்மடங்கு இவரிடம் அன்பாக இருக்கவும். என்னைவிட இவர் உங்களை மிகவும் அன்பாக பாதுகாப்பார். எனக்கு அந்தியகாலம் நெருங்கிவிட்டதால் இக்கடிதம் உங்களுக்கு எழுதலானேன்.

இப்படிக்கு,

ரங்கசாமி ஐயர்.

என்று எழுதியிருந்தது. அதையும் ரூ. 5000 ஐயும் கோவிந்தனிடம் கொடுத்து, அதை தர்மத்திற்கு செலவழிக்கும்படி கூறினார். சிவகாமியின் பெற்றோர்களையும், கோவிந்தனையும், சிவகாமியையும் உட்காரவைத்து அவர்களின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்தார். பிறகு அவர்களை பார்த்து, 'எனக்கு உலக வாழ்க்கையில் வெறுப்பு உண்டாய்விட்டது. நான் செய்ததெல்லாம் அக்கிரமமான செயல்கள். அதையெல்லாம் எழுதி கொடுத்திருக்கிறேன். நீங்கள் நான் செய்த துஷ்கிருத்தியங்களையெல்லாம் மறந்து என் ஆத்மா திருப்தியடையச் செய்யுங்கள்' என்று கூறி, ஒரு சிறு பொட்டலத்தை பிரித்து வாயில் கொட்டிக் கொண்டார். கோவிந்தன் சென்று தடுப்பதற்குள் ஐயர் மருந்தை விழுங்கிவிட்டார். ஐயர் சிறிதுநேரம் எல்லோரையும் ஒருமுறை

பார்த்துவிட்டு 'என்னை மன்னியுங்கள். என் ஆத்மா நல்வழிப்படும்படி கடவுளைப் பிரார்த்தியுங்கள். நான் போகிறேன் நான் போ...கி......' என்று கூறி கீழே விழுந்து உயிர்விட்டார்.

உடனே கோவிந்தன் ஐயருடைய கம்பெனிக்கு, ஐயர் மார்படைப்பால் இறந்துவிட்டார் என்று செய்தி அனுப்பினர். எல்லா வேலைக்காரர்களும் வந்து சேர்ந்துவிட்டனர். கோவிந்தன் தன்னிடமிருந்த காகிதத்தை வாசித்து காண்பித்தார். அவர்களும் கோவிந்தனை யஜமானராக ஏற்றுக்கொண்டனர். வேலைக்காரர்கள் மிகவும் துக்கத்துடன், ஐயருடைய பிரேதத்தை வெகு விமரிசையாக அடக்கம் செய்துவிட்டனர்.

ஐயருடைய பங்களாவில் சிவகாமியின் பெற்றோர்கள் சிலநாள் தங்கியிருந்தனர். கோவிந்தன் சிவகாமியின் பெற்றோர்களை அழைத்து 'அம்மா! நீங்கள் செய்ய இருந்த காரியம் மிகவும் தகாதது. பெண்களுடைய மனதை அறிந்து மணஞ் செய்யுங்கள். இதுவரையிலும் நடந்த கஷ்டங்களுக்கெல்லாம் தாங்கள் தான் காரணம். அதனால் என்னுடைய சகோதரியான இப்பெண் விரும்பும் நடேச ஐயருக்கே இவளை மணஞ்செய்து கொடுங்கள்' என்றார்.

தன் சகோதரியான சிவகாமியை அழைத்து, 'அம்மா! குழந்தாய்!! நீயே கற்பிற்சிறந்த உத்தமி. உன் உயிரை திரணமாக எண்ணி உன் கற்பை காத்துக்கொண்டது மிகவும் மெச்சத் தகுந்தது. நீ விரும்பும் புருடரையே அடைந்து நீடூழி வாழ்வாயாக. ஆனாலும் நீ அகாலமாக உன் உயிரை மாய்த்துக்கொள்ள இருந்த காரியம் மாத்திரம் தகாதது. நீ அறியாக் குழந்தையாதலால் உனக்கு அதன் கெடுதி தெரியாது. அதனால் இனிமேல் உனக்கு என்ன கஷ்டம் நேரிட்ட போதிலும் உன் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சிக்காதே. அப்படி செய்வது மிகவும் பாபம். உனக்கு ஏதாவது கஷ்டம் நேரிட்டாலும், பண நெருக்கடி உண்டானாலும் எனக்கு கடிதம் எழுது. நான் உனக்கு வேண்டிய உதவி செய்கிறேன்' என்று அவருடைய பெயர் அச்சடிக்கப்பட்டிருந்த கார்ட்டை கொடுத்தார். 'ஆனால் உனக்கு நான் நடுவில் உன் உயிரைப்பற்றி கூறியதை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்' என்றார்.

கோவிந்தன் சிவகாமிக்கு ரூ. 5000-மும் ரங்கசாமி ஐயருடைய பங்களாவையும் எழுதி கொடுத்தார். சிவகாமி முதலில் கோவிந்தனுடைய வேண்டுகோளுக்காக பெற்றுக்கொண்டாலும் அதை மறுபடியும் அவரிடம் கொடுத்து, 'அந்த பாபியினுடைய சொத்தை கையால் தொட்டாலும் பெரும்பாபம் சுற்றும்' என்று கூறி, அந்த சொத்தில் ஓர் சத்திரமும், பெண்களுக்கு ஓர் பிரசவ ஆஸ்பத்திரியும் ஏற்படுத்தும்படி கோவிந்தனிடம் கூறினள். கோவிந்தன் கம்பெனியின் மேல்பார்வைக்காக சிறிது ஆஸ்தியை வைத்துக்கொண்டு மற்ற சொத்துக்களைக்கொண்டு ஓர் தர்ம ஆஸ்பத்திரியும், பள்ளிக்கூடமும் ஏற்படுத்தி தன் மேல்பார்வையில் வைத்துக்கொண்டார். சிவகாமியின் வாக்கின் பிரகாரம், அவள் பேரிலே ஓர் ஆஸ்பத்திரியும், சத்திரமும் கட்டிவைத்தார். கோவிந்தன் சென்னையில் இருந்துகொண்டு ஐயருடைய கம்பெனியை பார்த்துக்கொண்டிருந்தார். கம்பெனி பழையபடி நல்ல ஸ்திதியில் வேலை செய்ய தொடங்கியது. சிவகாமியின் பெற்றோர்கள் சிவகாமியை அழைத்துக்கொண்டு தஞ்சை அடைந்தனர்.

சென்னையில் நடேச ஐயர் தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்தார். அவருடைய புத்தி சாதுரியத்தால் அவரை மேல் அதிகாரிகள், போஸ்டு மாஸ்டராக தஞ்சைக்கு மாற்றிவிட்டனர். நடேசனுடைய பெற்றோர்கள் அவரை எவ்வளவு வற்புறுத்தியும், அவர் விவாகம் செய்துகொள்ள மறுத்து விட்டார். அவர் தன் பெற்றோர்களை பார்த்து 'அம்மா! எப்படியாவது நான் சிவகாமியை விவாகம் செய்துகொள்ள முயற்சிக்கப் போகிறேன். அது தவறினால் பிரம்மசாரியாகவே என் காலத்தை கழிக்கப் போகிறேன்' என்றார்.

நடேசனுடைய பெற்றோர்கள், சிவகாமியின் பெற்றோர்களைக் கண்டு, தங்கள் பிள்ளைக்கு, சிவகாமியை மணம்செய்து தரும்படி கேட்டனர். ஆனால் அவர்கள் ஒரே பிடிவாதமாக தங்கள் பெண்ணை நடேசனுக்கு கொடுக்க மறுத்து விட்டனர். ராஜாம்மாள், சிவகாமியை தன் தம்பி பூபதி ஐயருக்கு கொடுத்துவிட வேண்டுமென்று தன் கணவனிடம் கூறினாள். அதற்கு;

வீராசாமி ஐயர்:—போடி! நம் சொத்தை விருத்தியாக்க ஓர் பணக்கார மாப்பிள்ளை தேடவேண்டும். அதனால் உன் தம்பிக்கு கொடுக்க சம்மதமில்லை.

ராஜாம்:—உமக்கு என்னமோ எங்கள் மனுஷ்யாளென்றால் எட்டிக் காய் மாதிரி இருக்கிறது. நம் பெண்ணை மற்றொருவனுக்கு கொடுத்தால் நம் சொத்தை நமக்கு மருமகனாக வருபவன் அழிக்க நேரிட்டாலும் நேரிடும். என்னுடைய தம்பிக்கு கொடுத்தால் அவனுக்கு நம் சொத்தின் மகிமை தெரியும். அதிகம் செலவழிக்காமல், கண்ணும் கருத்துமாயிருப்பான்.

வீராசாமி:—எனக்கு என்னமோ சம்மதமில்லை. ஒரு விஷயத்தில் நீ கூறுவது சரிதான். அதனால் வருகிற சித்திரை மாதம் விவாகத்தை முடித்து விடலாம்' என்றார்.

அவளும் ஒத்துக்கொண்டாள். 'இதை நாம் சிவகாமிக்கு கூறினால், இன்னும் ஏதாவது விபரீதங்கள் நடைபெறும். அதனால் இவ்விஷயத்தை அவளுக்கு தெரிவிக்காமல் முடித்துவிட வேண்டு' மென்றார்.

ஒருநாள் மாலை நடேச ஐயர் தன் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு போகும் பொழுது, சிவகாமி அவள் வீட்டின் மாடியில் நிற்பதை பார்த்தார். அவளும் அவரை பார்த்து விட்டாள். காதலர்கள் இருவரும் புன்னகை கொண்டனர். சற்றுநேரம் அவர் அப்படியே பிரமித்து நின்றுவிட்டார். பிறகு இருவரும் கண் ஜாடைகளால் வசகை செய்துகொண்டு பிரிந்தனர். அன்று முதற்கொண்டு, நடேச ஐயர் அவள் வீட்டின் வழியாக போகவரத் தலைப்பட்டார். சிவகாமியும் ஒவ்வொருநாளும் தவறாமல் மாலை 5 மணிக்கு மெத்தைக்கு வந்துவிடுவாள். இதனால் இருவரும், ஒருவரை ஒருவர் கண்டு மகிழ்ந்தனர். இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.

சிவகாமியை பூபதிக்கு மணம் செய்துகொடுக்கப் போகிறார்கள் என்ற சமாசாரம் (சிவகாமிக்கு) தெரிந்துவிட்டது. சிவகாமி கொண்ட வருத்தத்திற்கு அளவே கிடையாது. உடனே அவள் அன்றைய இரவு தன்னறைக்கு சென்று மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு, ஏ! பார்தாமா! ஏழையாகிய என்னை சோதிக்கலாமா. ஒரு விவாகவிபத்திலிருந்து, உம்முடைய அருளாலும் என்னுடைய சகோதரரான கோவிந்தனின் பரோபகாரத்தாலும் தப்பித்

தச் சொன்னேன். மறுபடியும் என்னை இவ்விதமான இக்கட்டுகளுக்கெல்லாம் உட்படவைக்கலாமா! கருணாகரரே! தீனதயாளா! வைகுண்டவாசா! இந்த ஒரு மாதமாக என் காதலரை கண்டு களித்து வந்தேனே. மறுபடியும் எங்களை பிரிப்பது சரியா? எங்கள் இஷ்டத்தை பூர்த்திசெய்து சேர்த்து வைப்பது உனது கடமையன்றோ. எனது காதலருக்கு இச்சமாசாரம் தெரிந்தால் அவர் உயிர்விட்டு விடுவாரே. ஏ! ஈசா! கைலைவாசா! நீதான் துணையிருக்க வேண்டும். உன்னைத்தான் நான் நம்பியிருக்கிறேன். என்னை காப்பாற்று காப்பாற்று' என்று கூறிக்கொண்டே சோர்ந்து விழுந்து விட்டாள்.

பிறகு விழித்து கடிகாரத்தை பார்க்க மணி 1. ஆய்விட்டது. உடனே மேஜை அருகிலசென்று ஒரு காகிதத்தை எடுத்து தன் காதலருக்கு எழுதத் தொடங்கினாள்.

தஞ்சை,

18—1—35.

என்னருமைக் காதலரே !

இத்தனை நாள் நான் உங்களிடம் பேசாவிட்டாலும் உங்களைத் தினந் தோறும் கண்டு களித்துவந்தேன். மறுபடியும் என்னுடைய பெற்றோர்கள் என்னை இச்சித்திரை மாதம் பூபதி ஐயருக்கு கொடுக்க நிச்சயித்திருக்கிறார் கள். இவ்விஷயம் எனக்கு இதுவரையிலும் தெரியாது. நேற்றைய தினந் தான் அறிந்தேன். ஒரு விவாக ஆபத்திலிருந்து தப்பித்துக் கொண்டோம், இனிமேல் நம் காதலராகிய உங்களை அடைந்து விடலாமென்று சந்தோஷப் பட்டேன். கடவுள் என் வாயில் மண்ணைப்போட்டு விட்டார். இல்லை... இல்லை. இன்னும் அப்படி செய்யவில்லை. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற பழமொழிப்படி நான் கடவுளைத்தான் நம்பியிருக்கிறேன். கருணாநிதியாகிய எம்பெருமானை அல்லும் பகலும் உங்களை என்னுடன் சேர்த்து வைக்கும்படி பிரார்த்தித்துக்கொண்டு வருகிறேன். தயவுசெய்து என்னை நாளை சாயந் திரம், என்னுடைய வீட்டின் பின்புறத்தில் சந்திக்கவும். மறக்க வேண்டாம்.

இப்படிக்கு,

தங்களை என்றும் மறவாத

சிவகாமி.

என்று எழுதி வைத்துவிட்டு துயின்றாள்.

மறுநாள் சாயந்திரம் நான்கு மணிக்கே மாடிக்குப்போய் தன் காதலர் வரவை எதிர்பார்த்திருந்தாள். சுமார் ஐந்து மணிக்கு, தன் காதலர் வருவதை கண்டு களிப்புற்றாள். அவர் அவள் வீட்டின் அருகில் வரும்பொழுது, தான் தயாராக எழுதிவைத்திருந்த கடிதத்தை அவருக்கு நேராக கீழே போட்டாள். நடேசன் அதை சந்தோஷத்துடன் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றார். தன் உடைகளை களையாமலே, வெகு அவசரமாக கடிதத்தைப் படித்தார். அப்படியே பிரமித்து விட்டார். ஒருவாறு தன் மனதை சமாதானப் படுத்திக் கொண்டு, மறுநாள் அவளை சந்தித்து பேசிக்கொள்ளலாமென்று தீர்மானித் துக் கொண்டார்.

மறுநாள் மாலை 6 மணிக்கு சிவகாமியை அவள் வீட்டின் பின்புறத்தில் சந்தித்தார். சிவகாமி சந்தோஷத்துடன், அவரை மார்புடன் தழுவிக்கொண்டாள். சிறிதுநேரம் கழித்து இருவரும் அவ்விடத்தில் அடர்ந்த ஓர் புல்தரையில் உட்கார்ந்தனர். சிவகாமி தான்பட்ட கஷ்டங்களையும், முதல் விவாகத்தினின்றும் தப்பித்துக் கொண்டதைப்பற்றியும் சுருக்கமாகக் கூறினாள். இருவரும் வருத்தப்பட்டனர். பிறகு சிவகாமி தனக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை கூறினாள். சிவகாமி தன்மேல் வைத்திருக்கும் அளவிலா காதலை கண்டு நடேசன் சந்தோஷப்பட்டார். இரவு மணி ஏழு ஆய்விட்டது. இருவரும் பிரிந்தனர். பின்னர் தினந்தோறும் வழக்கமாய் இருவரும் சந்தித்து வந்தனர். ஒருநாள் நடேசனுக்கு ஓர் யுக்தி தோன்றிற்று. அதாவது அவ்வூரிலிருக்கும் காளி கோயிலுக்கு சிவகாமியை அனுப்பிப் பிரார்த்திக்கும்படி ஏற்பாடு செய்தால், நமக்கு காளியின் அருளால் நன்மை உண்டாகும் என்று அவருக்கு தோன்றிற்று. உடனே சிவகாமிக்கு கடிதம் வரையலானார்.



கடிதத்தை அவருக்கு நேராக கீழே.........

தஞ்சை,

8—1—35.

எனது அருமைக் காதலியே!

இப்பொழுது உனக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கவலையில் சரிபாதி என்னிடமும் இருக்கிறது. உனக்கு இந்த மணவிபத்து தொலையவில்லையானால், உன் வாழ்நாளெல்லாம் வீணாய் விம்மி விம்மி அழுது பாழாகும். அதுபோல் என்னுடைய வாழ்நாளும் வீணாகும். என்னால், உன்னுடைய பெற்றோர்களுக்கு, உன் மனதில் ஏற்பட்டிருப்பவைகளையெல்லாம் வெளியிட்டு, அவர்களை வழிப்படுத்தும் திறனும் எனக்குக் கிஞ்சித்தும் இல்லையே. ஆனால் எனக்கு ஓர்வழி தோன்றுகிறது. அதனால் உனக்கும் எனக்கும் ஏதா

வது வழி எற்பட்டாலும் எற்படலாம். நம் ஊருக்கு அடுத்துள்ள கிராம தேவதையாகிய காளி கோயிலுக்கு தினந்தோறும் சென்று 'நீயே கதி' யென அவளோடு மன்றாடு. அப்பெருந்தேவியல்லாது, உனக்கு ஆபத்பாந்தவமாயிருந்து உதவிசெய்ய வேறொருவருமில்லை என்பது சத்தியம். கண்மணி! நீ காளியின் திருவடியே கதி என்று மனதை செலுத்திவிடுவாயாகில் இவ்விபத்து மாயமாய் மறைந்துவிடுமென்பது திண்ணம். மாதரசே! உன் புண்ணியவசத்தாலே எனக்கு தோன்றிய, இம்மதியைக்கொண்டு உன் விதியை வென்றுவிட, எல்லாம்வல்ல ஈசன் அருள்புரிவாராக.

இப்படிக்கு,

நடேசன்.

இதை மறுநாள் சிவகாமியிடம் கொடுத்துவிட்டு தன்னில்லம் சென்றார். சிவகாமி அதை படித்துவிட்டு, பத்திரமாக வைத்துக் கொண்டாள். அன்றைய தினமெல்லாம் அவளுக்கு பலவித யோசனைகள் உண்டாயிற்று. பிறகு தனக்குள் 'ஐயோ! முற்பிறப்பில் என்ன பாபம் செய்தேனோ? என்னுடைய பெற்றோர்கள் என் மனநிலைமையை அறியாமல், ஒரே பிடிவாதமாக பூபதிக்கு கொடுக்க நிச்சயித்து விட்டார்களே. அவர்களுடைய தற்கால அறியாமைக்காக, என் வாழ்நாள் முழுமையும் நான் துன்பப்பட்டு தொலையநேரிட்டிருக்கிறது. கொஞ்சம்கூட ஆலோசிக்காமல் நிச்சயித்து விட்டார்களே. இதுவும் என் விதி வசந்தான் போலும். நான் தினமும் துதிக்கும் கடவுள் என்முன் புலப்படுமாயின், அதன் முன்னேயாவது விழிந்தடித்துக் கொள்வேனே. அதுவும் எதிர்ப்படவில்லையே. அகதியாய் நிற்கும் எனக்கு என் காதலரை தவிர உதவி செய்பவர் ஒருவரும் இல்லையே' என்று வருத்தப்பட்டாள்.

மறுநாள் வெள்ளிக்கிழமை. சிவகாமி காளிகோயிலுக்கு செல்ல கற்பூரம், பழம், பூ முதலியவைகளை சித்தப்படுத்திவிட்டு, தன் காதலர் வரவுக்கு காத்திருந்தாள். ஐந்து மணிக்கு அவரும் வந்தார். சிவகாமி அவருக்கு நமஸ்காரம் செய்து, 'நாதா! பேதையான என்னை ஒரு பொருளாக யெண்ணி, என் கஷ்டத்தை அறிந்து, அதற்கோருபாயம் குறித்த ஆபத்பாந்தவராகிய உங்கள் உபகாரத்துக் கெதிருபகாரமாய் அடியாள் என்ன செய்யக்கூடும்? உங்கள் நிரூபத்தின்படி நடக்க தீர்மானம் கொண்டேன். இன்று வெள்ளிக் கிழமை ஆனதால் இன்று முதல் அக்காளியே துணையெனக்கொண்டு நடந்து வருவேன். எனக்கேதாவது அனுகூலம் ஏற்பட்டாலும் சரி, என்னை பெற்ற பாவிகளின் துன்மார்க்க விருப்பத்தின்படி பிரதிகூல ஏற்பட்டாலும் சரி, என் தலைவிதிபோல் நடக்கட்டும். ஆனால் நாதா! என் எண்ணம் கைகூடாமற் போமானால் நான் கட்டைக்கும் முட்டைக்கும்தான் அடிமைப் படுவேனே அன்றி, இதர மனுஷாளுக்கு நான் அடிமைப் படமாட்டேன். என் எண்ணம் கைகூடிவிடுமாகில் என் பிராணனுள்ளமட்டில் உங்களுக்கே திருப்பணிசெய்து என் வாழ்நாளை கழிப்பேன். இது சத்தியம்' என்றுகூறி கண்ணீர் மாலை மாலையாகவிட்டு கதறினள். பிறகு மிகுந்த வருத்தத்துடன் இருவரும் பிரிந்தனர்.

(தொடரும்)

'தம்பி மாசிலாமணி'

['செங்கரி சேன்']

அண்ணா எப்போதும் போலிராமல் அன்று ஒரு மாதிரியாக இருந்தார். அதற்குக் காரணமில்லாமலில்லை. என்னவென்று கேட்க மண்டியிலுள்ள மற்றவர்களுக்கு தைரியமுண்டா?

கடிகாரம் மட்டிலும் பயப்படாமல் வழக்கம் போல் 'டிங்! டிங்!'கென்று பத்து தடவையடித்தது. அதுமாதாக் கோவில் மணியைப் போல் அவ்வளவு அழகாக அடித்தது. துவிச்சக்கர வண்டியில் துரிதமாக வந்தான் மாசிலாமணி. மண்டிக்கு இவனோர் மாணவனைப்போல 10-மணிக்குத்தான் வருவான். ஏனெனில் இவன் பள்ளிக்கூடத்தை விட்டு இன்னும் ஆறுமாத காலம்கூட ஆகவில்லை.

தம்பி மாசிலாமணி சற்று குஷால் பேர் வழி அவனண்ணனை அண்ணாவென்னும் அண்ணாசாமி முதலியாரின் பேரில் அவனுக்கு அத்தியந்த பிரியம். அண்ணாவின் முகவாட்டத்தைக் கண்ட அவன் 'அண்ணா! ஏன் ஒரு மாதிரி யிருக்கிறீர்கள்' என்றான் வெகு நயமாக மாசிலாமணி.

'தம்பி! வியாபார விஷயமெல்லாம் உனக்கென்னத்திற்கு? அதெல்லாம் வீண் கவலை. அந்தப் பயல் இராஜப்பன் இருக்கிறானே அவனால் ஒன்றா இரண்டா? சிறிது நேரத்தில் இரண்டாயிரம் ரூபாயை தொலைத்துவிட்டான். வேண்டாமென்று சொன்னதை கேட்டானா? மிளகாய் விலையேறுமென்றான். என்ன ஏறினது? பெட்டியிலிருந்த பணம்தான் வெளியே ஏறினது. அதுதான் கண்ட பலன்' என்றார் வருத்தத்துடன் மண்டி முதலாளி அண்ணாசாமி முதலியார்.

'ரூ. 2000 நஷ்டமா! எப்படி? எனக்கொன்றும் புரியவில்லையே' என்றான் தம்பி மாசிலாமணி.

'தம்பி! உனது பி. ஏ. படிப்பெல்லாம் உத்தியோகத்திற்கு சரியே யொழிய வியாபாரத்திற்கு பயன்படாது. வியாபார லைனே வேறு. உனக்குச் சொன்னாலும் புரியாது. வேணுமென்றால் வேணு

கோபால் பிள்ளையைக் கேள். விவரமாகச் சொல்லுவார்' என்றார் அண்ணுசாமி முதலியார்.

மாசிலாமணி ஒரு கனைப்பு கனைத்துவிட்டு கண்களை சிமிட்டி விட்டு 'என்ன வேணு கோபால் பிள்ளைவாளே!' யென்ருன்.

அண்ணு கடையிலுள்ள அனைவர்க்கும் வேம்பு. தம்பியோ வைகுந்தத்து (பெயர் போன) கரும்பு போல.

'அவரும் சொன்னர். நானும் சொன்னேன். மிளகாய் விலை ஏறுதென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ரொம்ப அனுபோக சாலி மாதிரிதான் நமது இராஜப்பன். யார் சொன்னதையும் கவனிக்காமல் வாங்கிவிட்டான்' என்ருர் வேணுகோபால் பிள்ளை.

'பிள்ளைவாளே! இராஜப்பன் ஓர் அனுபோகசாலி யென்பதை யாரும் மறுக்க முடியாது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்த லல்லவோ அழகு' என்ருர் சின்ன முதலாளி மாசிலாமணி.

'உமாபுரம் சின்னப்ப செட்டியார் வசம் ஐயாயிரம் மூட்டை மிளகா யிருந்தது. சரக்கென்னமோ அபூர்வமானதுதான். மூன்றே முக்கால் விலைக்கு யார் யாரோ கேட்டுப் பார்த்தார்கள். நானும்தான் சென்று கேட்டுப் பார்த்தேன். அந்த விடாக்கண்டன் செட்டியார் மூன்றேமுக்காலுக்கு ஒரு சல்லி குறைந்தால்கூட கொடுக்க முடியா தென்று தயவு தாட்சண்ணியமின்றி கூறிவிட்டான். ஆனல் இராஜப் பன் இந்த விஷயத்தில் சாமர்த்தியசாலிதான். அந்த செட்டியாரை எப்படியோ மடக்கி மூன்று விலைக்கு பேசி முடித்து அச்சாரம் ரூ. 2000 கொடுத்து வந்துவிட்டான். நேற்று பம்பாயிலிருந்து மூட்டை ஒன்றுக்கு ரூ. 1—0—0 குறைந்துவிட்டதாக தந்தி வந்திருக்கிறது. ஒப்பந்தப்படி எல்லா மூட்டைகளையும் வாங்கினல் 5000த்திற்கு ரூ. 5000 நஷ்டம். அல்லது அச்சாரம் போனல் போகிறதென்றுவிட்டால் இரண்டாயிரம் நஷ்டம். என்ன செய்வது?' என்ருர் வேணுகோபால் பிள்ளை.

'வாங்காமலே விட்டுவிட்டால் அட்வான்ஸ் ரூ. 2000த்துடன் தொலைந்து போகும். ஒருசமயம் அந்த செட்டிக்கும் விலை இறங் கினது தெரிந்தால் ஒப்பந்தப்படி பூரா சரக்கையுமே வைத்துக் கொள்ளத்தானே சொல்லுவான். அப்பொழுது வாங்கித்தானே ஆகவேண்டும்' என்ருன் மாசிலாமணி.

'ஒப்பந்தப்படி வாங்கு என்ருல் வாங்கித்தா னுகவேண்டும்' என்ருர் வேணுகோபால் பிள்ளை.

'ஒரு சமயம் சரக்கே வேண்டாமென்ருல்?' என்ருன் மாசிலாமணி.

'வேண்டாமென்றால் சும்மா விட்டுவிடுவானா! விலை இறங்கியதால்தான் வேண்டாமென்கிறீர்கள். விலை உயர்ந்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒப்பந்தப்படி விலையேறிவிட்டது சாக்கு கொடுக்க முடியாதென்றால் அந்த ரெட்டியாரை சும்மா விட்டு விடுவோமா?' என்றார் வேணுகோபால் பிள்ளை.

மாசிலாமணிக்கு சிறிதுநேரம் ஒன்றுமே புரியவில்லை. பின் அவனது முகம் வெற்றியான ஓர் யோசனையை அடைந்ததாக அறிவித்தது. அந்த கவலை மனதைவிட்டு வெளிக்கிளம்பவில்லை. கதிரவன் வழக்கம்போல் அரபிக்கடலில் மூழ்கினான். அவன் மூழ்கினவுடன் மின்சார விளக்குகள் பற்றிக்கொள்ளவில்லை. சிறிது தாமதம் செய்தே இருள்தலையை நீட்டும் சமயம் பார்த்து அதை விரட்டியடித்தன மின்சார விளக்குகள்.

கடிகாரம் எட்டு அடித்தது. பெரிய முதலாளி வீட்டிற்கு கிளம்பினார். அப்புறம் சின்ன முதலாளியின் தர்பார். தம்பியின் தர்பாரில் 'சினிமா' விஷயங்கள்தான் பெரும்பாலும் கவனிக்கப்படும். ஆனால் அன்று 'கப்சிப்' என்று எல்லோருமிருந்தனர். 'இராஜப்பா!' என்றான் மாசிலாமணி. அவன் கூப்பிட்ட மாதிரியிலிருந்து ஏதாவது தனக்கு 'டோஸ்' கிடைக்குமென்று நினைத்தான் இராஜப்பன்.

'ராஜப்பா! நாணயமே பெரிதல்லவா? ரூ. 2000த்திற்காக கடையின் நாணயத்தை காப்பாற்றாமல் விடுவது மிகவும் கேவலம். மிளகாயின் விலை தற்பொழுது இறங்கியிருந்தாலும் பின்னால் ஏறலாம். ஆகவே நீ நாளை காலையில் உமாபுரத்திற்குச் சென்று ரெட்டியாரிடம் ஒப்பந்தம் செய்த பிரகாரம் சாக்குகளை வாங்கிக் கொண்டுவந்து விடு. யோசனை செய்யாதே. அண்ணாவுக்கு ஜவாப் சொல்ல நானுச்சு. பாக்கியை பிள்ளையிடம் வாங்கிக்கொண்டுபோ' என்றான் மாசிலாமணி.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அரை மனதாய் பணத்தை பெற்றுக்கொண்டு சென்றான் இராஜப்பன். மிளகாயில் ஒரு 'சான்ஸ்' அடிக்கலாமென்று நம்பினான். மற்றும் ஒப்பந்தப்படி ரெட்டியாரிடமிருந்து சாக்கை வாங்காவிட்டால் நாளையும் பின்னும் ரெட்டியார் முகத்தில் விழிக்க முடியாதென்பது அவனுக்குத் தெரியும்.

* * *

அரபிக்கடலில் குதித்த கதிரவன் வங்காளக் குடாக்கடலில் மெதுவாக தன் தலையை நீட்ட ஆரம்பித்தான். அதற்கு முன்னதாகவே காகங்கள் கரைந்தன. இராஜப்பன் வண்டிகளுடன் உமாபுரத்தை அடைந்தான்.

இராஜப்பனைக் கண்ட ரெட்டியார் தன் முகத்தை சுளித்துக் கொண்டார். அவனது வரவு அவருக்கு ஏனோ சந்தோஷத்தை அளிக்கவில்லை. 'என்ன இராஜப்பா! இப்படித்தானா உங்கள் வியாபாரம். ஒரு வாரமாச்சு. போய் ஜம்மென்று உட்கார்ந்துகொண்டாய். என் அவசரத்திற்குத்தானே கைமேல் காசு வந்தால் போதுமென்று நினைத்து மூன்று விலைக்கு தருவதாகச் சொன்னேன்' என்றார் சின்னப்ப ரெட்டியார்.

'ரெட்டியாரே! இந்த ஒருவாரத்திற்குள் எந்தக் கப்பல் முழுகிப் போய்விட்டது. இதோ வண்டிகளும் வந்துவிட்டன. அளவையாகட்டும். நேற்றே வரலாமென்று நினைத்தேன். சௌகரியப்படவில்லை' என்றான் இராஜப்பன்.

'அப்பா இராஜப்பா! இந்த பட்டணத்து ஆசாமிகள் சமாச்சாரமே யிப்படித்தான். வாக்கிலே சுத்தம் கிடையாது. சொல்வது ஒன்று. செய்வது ஒன்று. நீ வரமாட்டாயென்று நினைத்து, இப்பொழுதுதான், நீ காவிரியாற்றுப் பாலத்தண்டை வந்திருப்பாய், அந்த பட்டணத்து சேட்டுக்கு நாலு விலைக்கு தருவதாக ஒப்பந்தம் செய்துவிட்டேன். எனக்கு பணமுடை பெரியமுடை. இதெல்லாம் என் தம்பி செய்தவேலை. நான் அச்சாரம் வாங்கினது அவனுக்குத் தெரியாது. மிளகாய் விலை ஏறிவிட்டதென்று சேட்டு சொல்லுகிறான். ஐயாயிரம் ரூபாயை இழக்க யாருக்குத்தான் மனம்வரும்? உன் அச்சாரத்தை வாங்கிக்கொள். தாமதம்செய்து வந்துவிட்டு என் மேல் அப்படியும் இப்படியும் நொந்து கொள்வதில் பயனில்லை' என்றார் சின்னப்ப ரெட்டியார். வராது என்று நினைத்திருந்த அந்தப் பணம் தன்னை நாடி வலுவில் வருவதைக் கண்ட இராஜப்பனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆயினும் பட்டணத்து சேட் நான்கு விலைக்கு வாங்குவதென்றால் விலையேறித்தானே இருக்கவேண்டும். சின்ன முதலாளி மிளகாய் விலையேறுமென்றும் அவசியம் வாங்கிவரும்படியுமாகத்தானே சொன்னார். அதையெல்லாம் நினைத்தால் வாங்காமல் போவதற்கு அவன் மனம் சம்மதிக்கவில்லை.

'என்னங்க ரெட்டியாரே! விலையேறத்தானே எங்கள் அட்வான்ஸ் பணத்தை திருப்பித்தர பார்க்கிறீர்கள். விலையிறங்கி யிருந்தால் எங்கள் குடுமியைப் பிடித்து ஒப்பந்தப்படி சாக்கை தலையில் கட்டிவிட மாட்டீர்களா?' என்று ஒருபோடு போட்டான் இராஜப்பன். இதை காதில் வாங்கிக் கொள்ளாதவர்போல் உள்ளே சென்ற சின்னப்ப ரெட்டியார் நேரே சேட்டு இருக்கும் அறைக்குச் சென்று' சேட்! எங்கே அச்சாரம் கொடு!' என்றார். பையிலிருந்து பணத்தையெடுத்த சேட்டுக்கு என்ன தோன்றினதோ தெரியாது. அதிக நேரம் யோசனை செய்யாமல் 'ஓய் ரெட்டியாரு! உங்கள்

சங்கதி நம்பள்கு தெரியாதின்று நெனச்சுப்பட்டான். வெள்யேருக்கும் ஆசாமிக்கு அட்வான்ஸ் வாங்யிட்டு அவன்கு கேன்சல்செய்து விட்டு நம்பள்கி வாங்க பார்குரான். பின் நம்பள்கி வாங்கி வேறு ஆசாமி வந்தா அவன்கு கொடுத்துப்புட்வான். நம்பள்கிட்டே அந்த சம்சாரம் வேண்டாம். கைமேலே சர்க்கு. கைமேலே காசு' என்றான்.

ரெட்டியார் தாமதம் செய்யாமல் தன் பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்துக்கொண்டு வெளியேவந்து 'இராஜப்பா! இதோ நீ கொடுத்த அச்சாரம் ரூ. 2000. இந்த ரூ. 100 ஐ நீ இனமாக வைத்துக்கொள். எப்படியாவது உன் முதலாளியிடத்தில் கூறி சரிப் படுத்திவிடு. நான் சரக்கை சேட்டுக்கு கொடுத்துவிட்டேன். சீக்கிரம் போய்விடு. உனக்கு மெத்த புண்ணியமாயிருக்கும்' என்று கூறிக் கொண்டே வீட்டினுள் நுழைந்தார் சின்னப்ப ரெட்டியார்.

இராஜப்பனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. பணம் கிடைத்தால் போதுமென்று நினைத்தவனுக்கு இப்பொழுது சரக்கு கிடைத்தால் போதுமென்றாகி விட்டது. ஆனால் அதிர்ஷ்டமெப்படியோ! ரெட்டியார் தனக்கு சரக்கு கொடுக்காதது அவருக்கு அதிர்ஷ்டமா அல்லது தனக்கு அதிர்ஷ்டமாவென்று இராஜப்பனுக்குத் தோன்றவில்லை. சரக்கின்றி போவது பெரிய முதலாளிக்கு திருப்தி. பெரிய முதலாளியை திருப்தி செய்வதே தன் கடமையென நினைத்துப் புறப்பட்டான் இராஜப்பன். கடிகாரம் அதிகமாக மணியடித்து இனிய ஓசையை உண்டாக்கவில்லை. 'டிங்! டிங்!' கென்று இரண்டேதரம் அடித்தது. அண்ணாவும் கடைக்கு வந்தார். பணத்தை அவர் முன்னிலையில்வைத்து இராஜப்பன் வெகு கம்பீரமாக நின்றான்.

'ராஜப்பா! நீ மகா சமர்த்தன். ஆற்றில் கரைந்த உப்பென்று நினைந்தேன். அதை பொய்யாக்கினாய்' என்று புன்னகையுடன் புகன்றார் அண்ணா.

'நல்ல வழியில் சம்பாதித்த பணம் எப்பொழுதுமே நிலைக்கும். ரெட்டியாரிடமிருந்து இவ்வளவு சுலபத்தில் இந்தப் பணம் நம்மிடம் வருமென்று நான் கனவிலும் கருதவில்லை. ஆயினும் இது முருகனின் திருவருள். அந்த முருகபிரான் முருகபிரானாக வரவில்லை. ஓர் சேட்டாக வந்தார். அவர் வந்து நாலு விலைக்கு ஒப்பந்தம் செய்யாவிட்டால் இந்தப் பணத்தை இப்பொழுது நீங்கள் பார்க்க முடியாது. எல்லாம் அவன் செயல்' என்றான் இராஜப்பன்.

'சேட்டு நாலு விலைக்கு வாங்குவதென்றால் மிளகாயின் விலையேறித்தானே இருக்கவேண்டும்' என்றார் அண்ணா.

'நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அந்த செட்டி ஒரே பிடிவாதமாக நமக்கு கொடுக்க முடியாதென்று கூறிவிட்டான். நான் இன்று விசாரித்தவரையில் மிளகாயின் விலை ஏறினதாகத் தெரியவில்லை' என்றான் இராஜப்பன்.

'அப்படியானால் நாலு விலைக்கு செட்டியார் சரக்கை ஒப்பந்தம் செய்த சேட்டை முட்டாளென்று நினைக்கிறாயா?' என்றார் அண்ணா.

'விலை இறங்கியிருக்கும்பொழுது அதிக விலைக்கு வாங்கினால் அது முட்டாள் தனம்தான்' என்றான் இராஜப்பன்.

'இராஜப்பா! வண்டி வாடகையும் மற்ற செலவுகளும் நஷ்டம் தானே' என்றார் அண்ணா.

'அதற்குத்தானே ரூ. 100 கொடுத்திருக்கிறார்' என்றான் இராஜப்பன்.

'செலவுபோக பாக்கியை யாருக்குக் கொடுப்பது? அந்த சேட்டுக்குக் கொடுக்கலாமா? ஏனெனில் நம்மிடமிருந்து பெற்ற அச்சாரத்தை நம்மிடமே திருப்பித் தருவதற்காக, மிளகாயின் விலை உயர்ந்துவிட்டதென்றும் தானே எல்லா மூட்டைகளையும் வைத்துக் கொள்வதாகவும் அந்த சின்னப்ப செட்டிக்கு ஆசை காட்டின அந்த சேட்டை யாரென்று நினைத்துக் கொண்டாய்? உனது சின்ன முதலாளி மாசிலாமணிதான். தம்பியின் யோசனைக்கும் நடிப்பிற்கும் அந்த இரண்டாயிரத்தையும் அவனுக்கே கொடுத்தால்கூட கூடாதா?' என்றார் அண்ணா.

சேட்டா நடித்தவன் மாசிலாமணியென்பதை அறியவே அனைவரும் ஆச்சரியப்பட்டனர்.

'அவரது அபார புத்தியையும் நடிப்பையும் மெச்சுகிறேன் ஆயினும் அவரெப்படி அந்த செட்டியிடமிருந்து தப்பி வந்தார்!' என்றான் இராஜப்பன். 'இதுதானா பிரமாதம். நீ சென்றவுடன், சாக்குப்பை வாங்கவேண்டுமென்றும், சென்னைக்கு சரக்கு வாங்கியாய் விட்டதென்று ஓர் தந்தி கொடுக்க வேண்டுமென்றும் கூறிவிட்டு கடை வீதிக்கு செல்லுவதுபோல் பாசாங்கு காட்டிவிட்டு வந்து விட்டான்' என்றார் அண்ணா.

'தம்பி மாசிலாமணி'யை அனைவரும் புகழ்ந்து கொண்டனர். இப்பொழுது அண்ணாவிற்கு தன் தம்பியை ஓர் உத்தியோகத்தில் அமர்த்துவதற்கு யோசனை கிடையாது.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேக்கியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச்சிக்கல் நீங்குவதும் கணைச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புறுக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தாக்கூடியது.

சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

ஆர். சடகோபாச்சாரியார், பி ஏ., பி. எல். ஐகோர்ட் வக்கீல்.

டாக்டர் மே. மசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாள மணந்த பிறகு 'டணுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கின்றேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேக்கியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்பவேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B A., B. L.,

District Munsiff, Tanuku

ஒரு பவுன் புட்டி விலை ரூபா 2.

சகலமேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு கரந்த பசும்பாலில் கலந்து சாப்பிடவேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும் மேகவாய்வு, கைகால் பிடிப்பு, உடம்புவலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்

அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற சகலமேக சித்தாதி எண்ணெய்

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்

Edited, Printed and Published by Dr. M. Masilama
at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali St